நியாயப் பிரமாணமும் கட்டளைகளும்

எகிப்தின் அடிமைத்தனம்:

சகல தேசங்களிலும் பஞ்சம் கொடியதாக இருந்தபடியால் யாக்கோபு தன் கற்பப் பிறப்பாகிய 70 பேரோடும் போய் எகிப்தில் கோசேன் நாட்டில் குடியேறினான். யோசேப்பு அதற்கு முன்பதாகவே எகிப்திற்கு போயிருந்தான். இந்த தலைமுறையினர் மரணமடைந்தபின் இஸ்ரவேலர் ஏராளமாக பலுகி பெருகினார்கள். யோசேப்பை அறியாத புதிய ராஜா எகிப்தில் தோன்றினான். அவன் இஸ்ரவேலர் பெருகாதபடிக்கு அவர்களை மிகவும் ஒடுக்கினான். தொடர்ந்து இஸ்ரவேலர் ஒடுக்கப்பட்டனர். இஸ்ரவேலர் அடிமைத்தனத்திலிருந்து கதறினார்கள். அவர்கள் அடிமைத்தனத்திலிருந்து முறையிடும் சத்தம் தேவ சந்நிதியில் போய் எட்டியது தேவன் அவர்களை மோசே மூலம் விடுவிக்க முடிவெடுத்தார்.

செங்கடலை கடந்து வனாந்திரம் வழியாக வந்தனர். துரத்தி வந்த பார்வோனின் சேனை செங்கடலில் மூழ்கி அழிந்தது. இஸ்ரவேலர் எமோரியரின் மலை நாடான காதேஸ் பர்னேயாவில் வந்து சேர்ந்தார்கள். மோசே அங்கிருந்து கானான் தேசத்தை வேவு பார்க்க கோத்திரத்திற்கு ஒருவனாக 12 பேரை அனுப்பினான். அவர்கள் திரும்பி வந்து அதில் 10 பேர் துர்செய்தியை சொன்னார்கள். கானான் தேசத்தில் இருப்பவர்கள் நம்மைக் காட்டிலும் பலவான்கள். நாம் அவர்களை மேற்கொள்ள முடியாது என்றனர். மற்ற இரண்டு பேரும் நல்ல செய்தியை கொண்டு வந்தனர். கர்த்தர் அந்த தேசத்தை நமக்குத் தருவார். அது செழிப்பான தேசம் என்றனர். ஆனால் இஸ்ரவேலரோ கர்த்தர் எவ்வளவோ அற்புதம் செய்த போதிலும், அவரை விசுவாசியாமற் போனார்கள். ஆகவே கர்த்தர் கடுங்கோபங்கொண்டு காலேப், யோசுவா இவர்களை தவிர இந்த பொல்லாத சந்ததியில் ஒருவரும் கானானிற்குள் பிரவேசிப்பதில்லை என்றும் நன்மை தீமை அறியாத அவர்களுடைய பிள்ளைகளே அதில் பிரவேசிப்பார்கள் என்றும் இஸ்ரவேலரோ வனாந்திரத்திற்கு பிரயாணப்பட்டு போவார்கள் என்றும் சொன்னார். அதினிமித்தம் சபிக்கப்பட்ட அந்த இஸ்ரவேலர் யாவரும் வனாந்திரத்தில் மரித்தார்கள்.

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: *+91 90 190 490 70 / +91 7676 50 5599*

Email: *wordofgod@wordofgod.in*

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: *+91 90 190 490 70 / +91 7676 50 5599*

Email: *wordofgod@wordofgod.in*

அதற்கு 40 வருடங்கள் சென்றன, இந்த 40 வருடங்களும் இஸ்ரவேலர் வனாந்திரத்தில் அலைந்து திரிந்தனர். இஸ்ரவேலர் (கானானுக்கு சென்ற, வனாந்தரத்தில் மரித்த இஸ்ரவேலின் பிள்ளைகள்) கானான் தேசத்தில் பரிசுத்தமாக வாழ்வதற்காக கர்த்தரால் அவர்களுக்கு நியாயபபிரமாணமும் கட்டளைகளும் கொடுக்கப்பட்டன.

பரம கானானை நோக்கி பயணம் செல்லும் ஆவிக்குரிய இஸ்ரவேலராகிய நமக்கோ கர்த்தர் ஆவியின் பிரமாணத்தை கொடுத்திருக்கிறார். அந்த பிரமாணத்தின் கட்டளைகளுக்கு கீழ்படிந்து பரம கானானை சுதந்தரித்துக் கொள்வோம்.

நியாயப் பிரமாண கட்டளைகள் :

1. கர்த்தரை தவிர வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்.
2. கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிரு.
3. ஓய்வு நாளை பரிசுத்தமாய் ஆசரிப்பாயாக.
4. உன் தகப்பனையும் தாயையும் கனம் பண்ணு.
5. கொலை செய்யாதிருப்பாயாக.
6. விபச்சாரம் செய்யாதிருப்பாயாக.
7. களவு செய்யாதிருப்பாயாக.
8. பொய்சாட்சி சொல்லாதே.
9. பிறனுடைய மனைவியை இச்சியாதே.
10. பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதே.
11. கர்த்தரை பரீட்சை பாராதிரு.
12. கர்த்தருடைய பார்வைக்கு செம்மையும் நன்மையுமாய் இருக்கிறதைச் செய்
13. அந்நிய தேவர்களின் விக்கிரகங்களை சுட்டெரி. அவைகளில் இருக்கிற வெள்ளியையும், பொன்னையும் இச்சியாமலும் எடுத்துக் கொள்ளாமலும் இரு. அவைகளை உன் வீட்டிற்கு கொண்டு போகாதே.
14. ஒருவன் தன் புத்திரனை சிட்சிக்கிறது போல உன் தேவனாகிய கர்த்தர் உன்னை சிட்சிக்கிறார் என்று அறிந்து கொள்.
15. நீ புசித்து திருப்தி அடைகையில் கர்த்தர் உனக்கு கொடுத்த நல்ல ஆசீர்வாதத்திற்காக அவரை ஸ்தோத்தரி.

16. நீ புசித்து திருப்தியாகி நல்ல வீடு கட்டி குடி இருந்து உன் வெள்ளியும் பொன்னும் பெருகி நீ வர்த்திக்கும் போது என் சாமர்த்தியமும் என் கைப் பெலனும் இந்த ஐசுவரியத்தை எனக்கு சம்பாதித்தது என்று சொல்லாதே. அவரே ஐசுவரியத்தை சம்பாதிக்கிறதற்கான பெலனை உனக்கு கொடுக்கிறவர்.

17. அவரை மறந்து அந்நிய தேவர்களை பின்பற்றினால் நிச்சயமாகவே அழிந்து போவாய்.

18. என் நீதியினிமித்தம் கர்த்தர் இந்த நன்மையை எனக்குச் செய்தார் என்று சொல்லாதே.

19. உன் கர்த்தருக்கு கடுங்கோபம் உண்டாக்கிய சந்தர்ப்பங்களை நினை. அவற்றை மறவாதே.

20. கர்த்தருடைய வார்த்தைகளை உன் இருதயத்திலும் உன் ஆத்துமாவிலும் பதித்து அவைகளை உன் கையின் மேல் அடையாளமாக கட்டி, உன் கண்களின் நடுவே ஞாபகக் குறியாக வை. அவைகளை உன் பிள்ளைகளுக்கு உபதேசித்து நீ வீட்டில் உட்கார்ந்திருக்கும்போதும், படுத்துக் கொள்ளும்போதும், எழுந்திருக்கும் போதும் அவைகளைக் குறித்து பேசு. அவைகளை உன் வீட்டு நிலைகளிலும் வாசல்களிலும் எழுது.

21. தேவனிடத்தில் அன்புகூர்ந்து அவர் வழிகளில் நட.

22. கர்த்தருடைய நாமம் விளங்கும்படி நீங்கள் அவருடைய வாசஸ்தலத்தை நாடி, அங்கு உங்கள் பலிகளையும் தசமபாகங்களையும் உங்கள் படைப்புகளையும் பொருத்தனைகளையும், உற்சாகபலிகளையும் ஆடு மாடுகளின் தலையீற்றுகளையும் கொண்டு வந்து அங்கு கர்த்தருடைய சந்நிதியில் புசித்து, உங்களை ஆசீர்வதித்ததுமான யாவுக்காகவும் நீங்களும் உங்கள் குடும்பத்தாரும் சந்தோஷப்படுங்கள்.

23. கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்துகொள்ளும் இடத்தில் மட்டும் உங்கள் பலிகளையும் காணிக்கைகளையும் பொருத்தனைகளையும் செலுத்துங்கள். கண்ட இடமெல்லாம் உன் பலிகளை செலுத்தாதபடி எச்சரிக்கையாயிரு. இரத்தத்தை மட்டும் புசிக்க வேண்டாம். இரத்தமே உயிர் அதை தரையிலே ஊற்றி விடு.

24. உன் தானியம் உன் திராட்சரசம், உன் எண்ணை யாவற்றிலும் தசம பாகத்தையும் உன் ஆடு மாடுகளின் தலையீற்றையும் சகல பொருத்தனைகளையும் கர்த்தருடைய ஸ்தானத்தில் செலுத்து.

25. லேவியனை கைவிடாதபடி எச்சரிக்கையாயிரு.

26. கர்த்தரிடத்தில் நீ உன் முழு இருதயத்தோடும் அன்பு கூறுகிறீர்களா என்பதை அறியும்படிக்கு கர்த்தர் உன்னை சோதிக்கும்படி உங்களுக்குள் ஒரு தீர்க்கதரிசியையாவது சொப்பனகாரனையாவது அனுப்புவார். அவர்கள் நீங்கள் அறியாத வேறே தேவர்களை சேவிப்போம் என்று அடையாளத்தையும் அற்புதத்தையும் காண்பித்தாலும் அவர்கள் சொல்வதை கேட்காதே. கர்த்தரை பற்றிக் கொள். அந்த தீர்க்கதரிசி கொலை செய்யப்பட வேண்டும்.

27. உன் சகோதரனாகிலும், உன் குமாரனாகிலும் உன் குமாரத்தியாகிலும் உன் மனைவியாகிலும், உன் சிநேகிதனாகிலும் உன்னிடம் நாம் வேறே தேவர்களை சேவிப்போம் என்று இரகசியமாய் உன்னை ஏவி விட்டால் நீ அவனுக்கு செவி கொடாதே. அவன் கொலை செய்யப்படக்கடவன் அவன் மேல் கல்லெறிய வேண்டும்.

28. நீ குடியிருக்கும் பட்டணத்தில் பேலியாளின் மக்களாகிய துஷ்ட மனிதர், நீங்கள் அறியாத வேறே தேவர்களை சேவிப்போம் என்று பட்டணத்து குடிகளை ஏவினதால் அப்படிப்பட்ட அறுவறுப்புகள் நடந்ததை நீ கண்டால், அந்த பட்டணத்து குடிகளையும் மிருக ஜீவன்களையும் பட்டயக் கருக்கினால் சங்காரம் பண்ணு.

29. அதில் கொள்ளையிட்டதையெல்லாம் நடு வீதியில் கூட்டி அவற்றை அக்கினியில் சுட்டெரி. அந்த பட்டணம் நித்திய மண்மேடாகும்.

30. சபிக்கபட்ட பொருளில் ஒன்றும் உன் கையில் இருக்க வேண்டாம்.

31. கர்த்தருடைய பிள்ளைகள் செத்தவனுக்காக கீறிக் கொள்ள வேண்டாம்.

32. அருவருப்பான தொன்றையும் புசிக்க வேண்டாம்.

33. சுத்தமான பறவைகள் யாவையும் புசிக்கலாம். தானாய் இறந்து போன தொன்றையும் புசிக்க வேண்டாம்.

34. உனக்கு வந்த எல்லா பலன்களிலும் தசம பாகத்தை பிரித்து

லேவியனும் உன் வாசலில் இருக்கிற பரதேசியும் திக்கற்றவனும் விதவையும் புசித்து திருப்தியடையட்டும்.

35. எளியவனாகிய உன் சகோதரனுக்கு (இஸ்ரவேலனுக்கு) உன் இருதயத்தை நீ கடினமாக்காமலும் உன் கையை மூடாமலும் இருந்து அவனுக்கு உன் கையை தாராளமாய் திறந்து அவனுக்கு தேவையானதைக் கடன் கொடு.

36. உன் இருதயத்தில் பொல்லாத நினைவுகொண்டு உன் ஏழை சகோதரனுக்கு கொடாமல் மறுத்து அவன் மேல் வன்கண் வைக்காதபடிக்கும் அவன் உன்னைக் குறித்து கர்த்தரை நோக்கி அபயமிடாதபடிக்கும் எச்சரிக்கையாயிரு. அப்படி செய்தால் அது உனக்கு பாவமாகும்.

37. அவனுக்கு தாரளமாய் கொடு. அவனுக்குக் கொடுக்கும் போது உன் இருதயம் விசனப்படாதிருப்பதாக.

38. சிறுமை பட்டவனுக்கும் எளியவனுக்கும் உன் கையை தாரளமாய் திற.

39. உன் அடிமையை விடுதலைபண்ணி அனுப்பும்போது அவனை வெறுமையாய் அனுப்பாமல் அவனுக்கு தாராளமாய் கொடுத்து அனுப்பு.

40. உன் ஆடு மாடுகளில் தலையீற்றாகிய ஆண்களையெல்லாம் உன் தேவனாகிய கர்த்தருக்கு பரிசுத்தமாக்கக் கடவாய்.

41. முடமான, குருடான, பழுதும், அவலட்சணமான யாதொன்றையும் கர்த்தருக்கு பலியிட வேண்டாம்.

42. நீ எகிப்திலிருந்து (சாத்தான் பிடியிலிருந்து) புறப்பட்ட நாளை நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் நினைக்கும்படி பஸ்கா பலியுடனே புளிப்புள்ள அப்பம் புசியாமல் சிறுமையின் அப்பமாகிய புளிப்பில்லாத அப்பங்களை ஏழு நாட்கள் வரைக்கும் புசி. நீ தீவிரமாய் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டபடியினால் இப்படி செய்ய வேண்டும்.

43. புளிப்பில்லாத அப்பப் பண்டிகையிலும் வாரங்களின் பண்டிகையிலும் கூடாரப் பண்டிகையிலும் உன் ஆண் மக்கள் கர்த்தருடைய சந்நிதிக்கு முன்பாக வெறுங்கையோடே வராமல் அவனவன் தன் தன் தகுதிக்கு தக்கதாக காணிக்கையைக் கொண்டு வரக்கடவன்.

44. நியாதிபதிகளும், தலைவர்களும் நீதியுடன் ஜனங்களை நியாயந்தீரப்பு செய்யக்கடவர்கள்.

45. நியாயத்தை புரட்டாதிருப்பாயாக.
46. முகதாட்சியம் பண்ணாமலும் பரிதானம் வாங்காமலும் இரு.
47. நீதியை பின்பற்று.
48. யாதொரு தோப்பையும், சிலையையும் கர்த்தருடைய பலி பீடத்தண்டையில் உண்டாக்காதே.
49. எந்த புருஷனாவது, ஸ்திரியாவது, வேறே தேவர்களையாவது சந்திர சூரியன் முதலான வான சேனைகளை சேவிப்பது மெய் என்று கண்டால், அப்படி பட்டவைகளை செய்கிறவர்கள் சாகும்படி கல்லெறிய பட வேண்டும்.
50. உன் வாசல்களில் வழக்கு நேரிட்டு நியாயந் தீர்ப்பது உனக்கு அரிதானால், நீ கர்த்தர் தெரிந்து கொண்ட ஆசாரியனிடத்தில் விசாரி. நியாயம் இன்னதென்று அவர்கள் உனக்கு அறிவிப்பார்கள். அதன்படி நீ செய். ஆசாரியன் அல்லது நியாயாதிபதியின் சொல்லை ஒருவன் கேட்காவிட்டால் அவன் சாகக்கடவன்.
51. உன் சகோதரன் அல்லாத அந்நியனை உனக்கு ராஜாவாக ஏற்படுத்தாதே. உன் சகோதரர்க்குள் இருக்கிற ஒருவனையே உன் மேல் ராஜாவாக ஏற்படுத்து. அந்நியன் அநேக குதிரைகளை தனக்கு சம்பாதிக்கும்படி ஜனங்களை திரும்ப எகிப்திற்கு (சாத்தானிடம்) போகப் பண்ணுவான்.
52. அவன் இருதயம் பின்வாங்கிப் போகாதபடிக்கு அநேக ஸ்திரிகளை படைக்க வேண்டாம். வெள்ளியும் பொன்னும் தனக்கு மிகுதியாய் பெருகப் பண்ணவும் வேண்டாம்.
53. அவன் சிங்காசனத்தில் இருக்கும் போது தன் சகோதரர் பேரில் மேட்டிமை கொள்ள வேண்டாம்.
54. கர்த்தருக்கு பயந்திருக்கும்படி நியாயப்பிரமாண பிரதி ஒன்றை தான் வைத்து தன் ஜீவன் உள்ள நாளளவும் அதை வாசிக்க வேண்டும்.
55. உன் தானியம் திராட்சரசம் இவைகளின் முதற்பலனை ஆசாரியனுக்கு கொடுக்க வேண்டும்.
56. தன் மகனையாவது தன் மகளையாவது தீக்கடக்கப் பண்ணாதே.
57. குறி சொல்லாத.
58. நாள் பார்க்காதே

59. சூனியம் செய்யாதே.

60. மந்திரவாதம், சன்னத்து செய்தல், மாய வித்தை, செத்தவர்களிடம் குறிகேட்டல் இவைகளை செய்யாதே.

61. கர்த்தருக்கு முன்பாக உத்தமனாய் இரு.

62. மோசேயை போல ஒரு தீர்க்கதரிசியை (இயேசு கிறிஸ்துவை) கர்த்தர் அவர்களுக்காக அவர்கள் சகோதரரிலிருந்து எழும்பப் பண்ணி கர்த்தருடைய வார்த்தையை அவர் வாயில் வைப்பார். கர்த்தருடைய வார்த்தைக்கு செவி கொடாதவன் எவனோ அவனை கர்த்தர் விசாரிப்பார்.

63. கர்த்தர் கட்டளையிடாத வார்த்தையை கர்த்தருடைய நாமத்தினாலே சொல்லும் தீர்க்கதரிசியும் வேறே தேவர்களின் நாமத்தினாலே பேசும் தீர்க்கதரிசியும் சாகக்கடவர்கள்.

64. ஒரு தீர்க்கதரிசி கர்த்தரின் நாமத்தினாலே சொல்லும் காரியம் நிறைவேறாமல் போனால் அது கர்த்தர் சொல்லாத வார்த்தை என்று அறிந்து கொள். அந்த தீர்க்கதரிசி தன் துணிகரத்தினால் சொன்ன வார்த்தை அவனுக்கு பயப்படாதே.

65. தான் முன்னே பகைத்திராத பிற ஒருவனை மனதறியாமல் ஒருவர் கொன்று போட்டால், இரத்தப் பழிக்காரன் இவனை கொன்று போடாதபடிக்கு இவன் ஓடிபோய் அடைக்கலம் பட்டணத்தில் உயிரோடிருக்கலாம்.

66. ஒருவன் பிறஒருவனைப் பகைத்து அவனை கொன்று, இந்த அடைக்கலம் பட்டணங்களில் குடி இருந்தால் அந்த பட்டணத்தின் மூப்பர்கள் அவனை ஆள் அனுப்பி கொண்டு வந்து இரத்தப்பழி வாங்குகிறவன் கையில் கொடுக்க வேண்டும். அவனுக்கு இரங்க வேண்டாம்.

67. உன் கைவசம் இருக்கும் காணியாட்சியிலே முன்னோர்கள் குறித்திருக்கிற பிறனுடைய எல்லையை ஒற்றிப் போடாதே.

68. ஒருவர் எந்த பாவத்தையாவது செய்தால் ஒரே சாட்சியினால் நியாயந்தீர்க்கக் கூடாது. இரண்டு மூன்று சாட்சிகளினால் காரியம் நிலைவரப்பட வேண்டும்.

69. ஒருவர் மேல் ஒரு குற்றத்தைச் சுமத்தும்படி பொய்சாட்சிக்காரன் எழும்பினால் வழக்காடும் இருவரும் கர்த்தருடைய சந்நிதியில்

ஆசாரியர்களுக்கும் நியாயதிபதிகளுக்கும் முன் வந்து நிற்க வேண்டும். நியாதிபதிகள், சாட்சி கள்ளச் சாட்சி என்றும் அவன் அபாண்டமான குற்றம் சாட்டினான் என்றும் கண்டால், அவன் குற்றமற்றவனுக்கு செய்ய நினைத்ததையே அவனுக்கு செய்ய வேண்டும்.

70. ஜீவனுக்கு ஜீவன், கண்ணுக்கு கண், பல்லுக்கு பல், கைக்கு கை, காலுக்கு கால் கொடுக்கப்பட வேண்டும்.

71. உன் சத்துருக்களோடே யுத்தம் பண்ணப் புறப்படும்போது பயப்படாதே. உனக்காக யுத்தம் பண்ணவும் உன்னை இரட்சிக்கவும் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே கூட வருவார்.

72. ஒரு பட்டணத்தின் மேல் யுத்தம் பண்ண நெருங்கும்போது அந்த பட்டணத்திற்கு சமாதானம் கூறு. அவர்கள் உனக்கு சமாதானமான உத்தரவு கொடுத்தால் அவர்கள் உனக்கு ஊழியம் செய்யக் கடவர்கள் மாறாக உனக்கு எதிராக யுத்தம் பண்ணினால், நீ அதன் புருஷர் அனைவரையும் பட்டயக்கருக்கினால் வெட்டி ஸ்தீரிகளையும் குழந்தைகளையும் விட்டு விடு. பட்டணத்து எல்லாவற்றையும் கொள்ளையிட்டு உனதாக்கிக் கொள்.

73. கானானில் வாழும் மக்கள் தங்கள் தேவர்களுக்கு செய்யும் அருவருப்புகள் படியே நீங்களும் செய்ய உங்களுக்கு கற்று கொடாதபடிக்கு அவர்கள் யாவரையும் முற்றிலும் அழித்து விடு.

74. தேசத்தில் ஒருவன் கொலை செய்யப்பட்டு அவனைக் கொன்றவன் இன்னான் என்று தெரியாதிருந்தால், மூப்பரும், நியாயதிபதிகளும் ஆசாரியரும், வேலையில் பயன்படாத ஒரு கிடாரியை பிடித்து, ஒரு தரிசு நிலத்திலே அதைக் கொண்டுபோய் அந்த பள்ளதாக்கிலே அதன் தலையை வெட்டிப் போட வேண்டும். தலை வெட்டப்பட்ட கிடாரியின் மேல் தங்கள் கைகளை கழுவி எங்கள் கைகளை அந்த இரத்தத்தை சிந்தினதுமில்லை எங்கள் கண்கள் அதைக் கண்டதுமில்லை. கர்த்தாவே எங்கள் மேல் குற்றமில்லாத இரத்தப் பழியை சுமத்தாதிரும் எங்கள் மேல் கிருபையாயிரும் என்று சொல்ல வேண்டும். அப்பொழுது இரத்த பழி அவர்களுக்கு நிவிர்த்தியாகும்.

75. தகப்பன் சொல்லையும் தாய் சொல்லையும் கேளாமலும் அவர்களால்

தண்டிக்கப்பட்டும் கீழ்படியாமலும் இருக்கிற அடங்கா துஷ்டபிள்ளை இருந்தால் அவனை பட்டணத்து மூப்பரிடத்தில் கொண்டு வர வேண்டும், பட்டணத்து மனிதர் அவன் சாகும்படி அவன் மேல் கல்லெறிய வேண்டும்.

76. ஒருவன் மேல் சாவுக்கு பாத்திரமான பாவம் உண்டானால் அவனை கொலை செய்யும்படி மரத்திலே தூக்கி போடு வாயானால் இரவிலே அந்த பிரேதம் மரத்திலே தொங்கக் கூடாது. அந்நாளிலேயே அடக்கம் பண்ண வேண்டும். தூக்கிப் போடப்பட்டவன் தேவனால் சபிக்கப்பட்டவன். ஆகவே தேசத்தை தீட்டு படுத்தக் கூடாது.

77. உன் சகோதரனுடைய (இஸ்ரவேலரில் ஒருவன்) ஆடாவது மாடாவது கழுதையாவது வேறு ஏதுவானாலும் வழி தப்பிப் போகிறதை கண்டாயாகில் அதை காணாதவன் போல இராமல் அதை உன் சகோதரனிடத்திற்கு திருப்ப கொண்டு போய் விடு. அவன் உனக்கு அறிமுகமானவனாயிராதிருந்தால் அவன் தேடி வரு மட்டும் உன்னிடம் வைத்து அதை திருப்பிக் கொடு.

78. புருஷர்களுடைய உடைகளை ஸ்திரிகள் தரிக்கக் கூடாது ஸ்திரிகள் உடைகளை புருஷர் தரிக்கக் கூடாது. அப்படி செய்கிறவர்கள் தேவனுக்கு அருவருப்பானவர்கள்.

79. நீ ஒரு புது வீட்டை கட்டினால் ஒருவன் உன் மெத்தையிலிருந்து விழுகிறதினாலே நீ இரத்த பழியை உன் வீட்டின் மேல் சுமத்தாதப்படிக்கு அதற்கு கைப்படி சுவரைக் கட்ட வேண்டும்.

80. உன் திராட்ச தோட்டத்தில் பற்பலவிதமான விதையை விதைக்காதே.

81. மாட்டையும் கழுதையையும் பிணைத்து உழாதிருப்பாயாக.

82. ஆட்டுமயிரும் பஞ்சு நூலும் கலந்த வஸ்திரத்தை உடுத்திக் கொள்ளாயாக.

83. ஒரு பெண் வேசித்தனம் பண்ணியிருந்தால் அவள் கல்லெறிந்து கொல்லப்பட வேண்டும்.

84. ஒரு பெண்ணை பலவந்தமாக ஒருவன் கற்பழித்தால் அவன் கல்லெறிந்து கொல்லப்பட வேண்டும்.

85. வேசி பிள்ளை கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது அவனுக்கு பத்தாம் தலைமுறையானவனும் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது.

86. இஸ்ரவேலர் எகிப்திலிருந்து வருகிற வழியில் அமலேக்கியரும் மோவாபியரும் அப்பத்தோடும் தண்ணீரோடும் அவர்களுக்கு எதிர்கொண்டு வராததினிமித்தமும், இஸ்ரவேலரை சபிக்கும்படி மோவாபின் அரசன், பிலேயாம் என்ற தீர்க்கதரிசியை கூலி பேசி அழைத்ததினாலும் அமலேக்கியரும் மோவாபியரும் என்றன்றைக்கும் கர்த்தருடைய சபைக்குள் பிரவேசிக்கக் கூடாது.

87. உன் சத்துருக்களுக்கு விரோதமாய் புறப்படும்போது தீதான காரியங்கள் எல்லாவற்றிற்கும் விலகி இருப்பாயாக.

88. கர்த்தர் உன் பாளையத்திற்குள் உலாவி வரும் படியாக உன் பாளையம் சுத்தமாக இருக்க வேண்டும்.

89. தன் எஜமானுக்கு தப்பி உன்னிடத்தில் வந்த வேலைக்காரனை அவனுடைய எஜமான் கையில் ஒப்புக் கொடாயாக. அவன் உன்னுடனே இருப்பானாக. அவனை ஒடுக்க வேண்டாம்.

90. இஸ்ரவேலின் குமாரத்திகளில் ஒருத்தியும் வேசியாயிருக்க கூடாது.

91. வேசிப் பணயத்தையும், நாயின் கிரயத்தையும் எந்த பொருத்தனை யினாலாகிலும் கர்த்தருடைய ஆலயத்திற்கு கொண்டு வராதே. அவை கர்த்தருக்கு அருவருப்பானவை.

92. கடனாக கொடுக்கிற பணத்திற்கும் ஆகாரத்திற்கும் வேறே எந்த பொருளுக்கும் வட்டி வாங்காதே.

93. கர்த்தருக்கு பொருத்தனை பண்ணி இருந்தால் அதை செலுத்த தாமதியாதே. கர்த்தர் நிச்சயமாக அதை உன் கையில் கேட்பார். அது உனக்கு பாவமாகும் உன் வாயினால் சொன்னதை நிறைவேற்ற வேண்டும்.

94. நீ பிறனுடைய திராட்சத் தோட்டத்தில் பிரவேசித்தால் உன் ஆசை தீர திராட்சைப் பழங்களை புசிக்கலாம். ஆனால் உன் கூடையிலே கொண்டு போகக் கூடாது.

95. பிறருடைய விளைச்சலில் பிரவேசித்தால் உன் கையினால் கதிர்களைக் கொய்யலாம். நீ அந்த விளைச்சலில் அரிவாளை இடலாகாது.

96. ஒருவர் ஒரு ஸ்திரியை விவாகம் பண்ணிக் கொண்ட பின் அவளிடத்தில் இலச்சையான காரியத்தைக் கண்டு அவள் மேல்

பிரியமற்றவனானால் அவன் தள்ளுதல் சீட்டை எழுதி அவள் கையிலே கொடுத்து அவளை தன் வீட்டிற்கு அனுப்பி விடலாம். அவள் வேறொருவனுக்கு மனைவியாகலாம்.

97. ஒருவன் ஒரு பெண்ணை புதிதாய் விவாகம் பண்ணி இருந்தால் அவன் யுத்தத்திற்கு புறப்பட வேண்டாம். அவன் மேல் யாதொரு வேலையும் சுமத்த வேண்டாம். அவன் தன் வீட்டில் சந்தோஷமாக இருக்கட்டும்.

98. திரிகையின் அடிக் கல்லையாவது அதின் மேல் கல்லையாவது ஒருவரும் அடகாக வாங்கக் கூடாது. அது ஜீவனை அடகு வாங்குவது போலாகும்.

99. இஸ்ரவேல் புத்திரரில் ஒருவனை திருடி அவனை விற்றுப் போட்ட ஒருவன் அகப்பட்டால் அந்த திருடன் கொலை செய்யப்படக் கடவன்.

100. பிறனுக்கு நீ ஏதாகிலும் கடனாகக் கொடுத்தால் அவன் கொடுக்கும் அடகை வாங்க நீ அவன் வீட்டிற்குள் பிரவேசியாதே வெளியே நில். கடன் வாங்கினவன் அந்த அடகை வெளியே உன்னிடத்தில் கொண்டு வருவான். அவன் தரித்திரனானால் அவன் உன்னை ஆசீர்வதிக்கும்படி அந்த அடகை திரும்ப அவனுக்கு கொடுத்து விடு. அது உனக்கு நீதியாக இருக்கும்.

101. உன் சகோதரரிலும் உன் தேசத்தின் வாசலில் உள்ள அந்நியரிலும், ஏழையும், எளியனுமான கூலிக்காரனை ஒடுக்காதே.

102. கூலிக்காரன் வேலை செய்த நாளிலே பொழுது போகு முன்னே அவன் கூலியை அவனுக்குக் கொடுத்து விட வேண்டும் அவன் ஏழையும் அதின் மேல் ஆவலுமாயிருக்கிறான்.

103. பிள்ளைகளுக்காக பிதாக்களும் பிதாக்களுக்காக பிள்ளைகளும் கொலை செய்யப்பட வேண்டாம். அவனவன் செய்த பாவத்தினிமித்தம் அவனவன் கொலை செய்யப்பட வேண்டும்.

104. அந்நியனுடைய நியாயத்தையும், திக்கற்ற பிள்ளைகளின் நியாயத்தையும் புரட்டாதே.

105. விதவையின் வஸ்திரத்தை அடகாக வாங்காதே.

106. உன் பயிரை அறுக்கையில் வயலில் ஒரு அரிக்கட்டை மறதியாய்

வைத்தாயானால் அதை எடுத்து வரும்படி திரும்ப போக வேண்டாம். கர்த்தர் உன் கையின் பிரயாசத்திலெல்லாம் உன்னை ஆசீர்வதிக்கும்படிக்கு அதை பரதேசிக்கும், திக்கற்ற பிள்ளைகளுக்கும் விதவைக்கும் விட்டு விடு.

107. உன் ஒலிவ மரத்தை உதிர்த்து விட்ட பின்பு கொம்பிலே தப்பி இருக்கிறதைப் பறிக்கும்படி திரும்ப போகாதே. அதை பரதேசிக்கும், திக்கற்ற பிள்ளைக்கும் விதவைக்கும் விட்டு விடு.

108. உன் திராட்சைப் பழங்களை அறுத்த பின்பு மறுபடியும் அதை அறுக்கத் திரும்பி போக வேண்டாம். அதை பரதேசிக்கும், திக்கற்ற பிள்ளைக்கும், விதவைக்கும் விட்டு விடு.

109. உன் அடிமைத்தனத்தை மறந்து விடாதே.

110. மனிதருக்குள் வழக்குண்டானால், நியாயாதிபதிகள் நீதிமானை நீதிமான் என்றும் குற்றவாளியை குற்றவாளி என்றும் தீர்க்க வேண்டும்.

111. குற்றவாளி அடிகளுக்கு பாத்திரவானானால் அவனுடைய குற்றத்தின் கணக்குப்படி அடிப்பிக்க வேண்டும்.

112. அவனை 40 அடி வரைக்கும் அடிக்கலாம். அதற்கு அதிகமாக அடிக்க கூடாது.

113. போரடிக்கிற மாட்டை வாய் கட்டாயாக.

114. உன் பையிலோ, வீட்டிலோ பெரிதும் சிறியதுமான பலவித நிறைகற்களை வைத்திருக்க வேண்டாம்.

115. குறையற்ற சுமுத்திரையான நிறைகல்லும் குறையற்ற படியும் உன்னிடத்தில் இருக்க வேண்டும்.

116. எகிப்திலிருந்து புறப்பட்டு வருகிற வழியாக அமலேக்கு உனக்கு எதிராக வந்து உன் பாளையத்தில் பலவீனரை வெட்டினான். ஆகவே நீ தேசத்திலே இளைப்பாறும் போது அமலேக்கின் பேரை பூமியில் இராதபடி அழித்துப் போடு.

117. உன் விளைச்சலின் முதற்கனியை கர்த்தருடைய சன்னிதிக்கு கொண்டு வா.

118. உன் வரத்திலெல்லாம் பத்தில் ஒன்றை எடுத்து லேவியனும், பரதேசியும், திக்கற்ற பிள்ளையும் விதவையும் உன் வாசல்களில் புசித்து திருப்தியாகும்படி அவர்களுக்கு கொடு.

119. தொழிலாளர்களுடைய கைவேலையால் செய்யப்பட்டதும் வார்ப்பிக்கப்பட்டதுமான யாதொரு விக்கிரத்தை உண்டு பண்ணி வைக்கிறவன் சபிக்கப்பட்டவன்.

120. தன் தகப்பனையும் தன் தாயையும் தூஷிக்கிறவன் சபிக்கப்பட்டவன்.

121. பிறருடைய எல்லைக் குறியை ஒற்றிப் போட்டவன் சபிக்கப்பட்டவன்.

122. குருடனை வழி தப்பச் செய்கிறவன் சபிக்கப்பட்டவன்.

123. பரதேசி, திக்கற்றவன் விதவை ஆகிய இவர்களுடைய நியாயத்தைப் புரட்டுகிறவன் சபிக்கப்பட்டவன்.

124. ஒளிப்பிடத்திலே பிறனை கொலை செய்கிறவன் சபிக்கப்பட்டவன்.

125. குற்றமில்லாதவனை கொலை செய்யும்படி பரிதானம் வாங்குகிறவன் சபிக்கப்பட்டவன்.

126. நியாயப் பிரமாண வார்த்தைகளையெல்லாம் கைக்கொண்டு நடவாதவன் சபிக்கப்பட்டவன்.

127. மனிதரிலும் மிருக ஜீவன்களிலும் பிறக்கிற முதற்பேரனைத்தும் கர்த்தருக்குரியது.

128. உன் பிள்ளைகளில் முதற்பேரான சகல நரஜீவனையும் ஒரு ஆட்டுக்குட்டியால் மீட்டுக் கொள்வாயாக. எகிப்து தேசத்தில் பார்வோன் கடினப்படுத்தும்போது கர்த்தர் எகிப்து தேசத்தின் தலையீற்றுகள் யாவையும் கொன்று போட்டார். அதை நினைவு கூறும்படி இப்படி செய்ய வேண்டும்.

129. பிதாக்களுடைய அக்கிரமங்களை பிள்ளைகளிடம் 3ம் 4ம் தலைமுறை மட்டும் கர்த்தர் விசாரிப்பார்.

130. ஒரு மனிதனை சாகும்படி அடித்தவன் நிச்சயமாக கொலை செய்யப்படக் கடவன்.

131. ஒருவன் பிறனுக்கு விரேதமாய் சதி மோசம் செய்து அவனை துணிகரமாய் கொன்று போட்டால் அவனை கர்த்தருடைய பலிபீடத்திலிருந்தும் பிடித்துக் கொண்டு போய் கொலை செய்ய வேண்டும்.

132. தன் தகப்பனையாவது தாயையாவது அடிக்கிறவன் நிச்சயமாக கொலை செய்யப்படக்கடவன்.

133. தன் தகப்பனையாவது தாயையாவது சபிக்கிறவன் நிச்சயமாக கொலை செய்யப்படக்கடவன்.

134. ஒருவன் மற்றொருவனை கல்லால் எறிந்ததினாலாவது கையால் அடித்ததினாலாவது அவன் சாகாமல் கட்டில் கிடையாகி, பின் எழுந்து ஊன்று கோல் பிடித்து நடமாடினால் அடித்தவன், அடிபட்டவனுக்கு நஷ்டத்தைக் கொடுத்து அவனை நன்றாக குணமாக்க வேண்டும்.

135. ஒருவன் தன் அடிமையை அடித்ததினால் அவன் இறந்துபோனால் பழிக்குப் பழி வாங்க வேண்டும்.

136. திருடன் கன்னமிடுகையில் கண்டு பிடிக்கப்பட்டு அடிக்கப்பட்டுச் செத்தால் அவன் நிமித்தம் இரத்தப்பழி சுமராது. அவன் சாகவில்லையானால் அவன் நிமித்தம் இரத்தப் பழி சுமரும். திருடன் பதில் கொடுத்து தீர்க்க வேண்டும்.

137. ஒருவன் பிறனிடத்தில் எதையாகிலும் இரவலாக வாங்கினதுண்டானால், அது சேதப்பட்டாலும் செத்து போனாலும் அதற்கு அவன் உத்தரவாதம் பண்ண வேண்டும்.

138. சூனியக்காரியை உயிரோடே வைக்கக் கூடாது.

139. கர்த்தர் தவிர வேறே தேவர்களுக்கு பலியிடுகிறவன் சங்கரிக்கப்படக்கடவன்.

140. அந்நியரை ஒடுக்காதீர்கள்

141. விதவையும் திக்கற்ற பிள்ளைகளையும் ஒடுக்காதீர்கள் அவர்கள் முறையிடுதலை கர்த்தர் நிச்சயம் கேட்டு உங்களை பட்டயத்தால் கொலை செய்வார்.

142. உங்களில் சிறுமைபட்ட ஒருவனுக்கு கடன் கொடுத்தால் வட்டி வாங்காதே.

143. பிறருடைய வஸ்திரத்தை ஈடாக வாங்கினால் பொழுது போகுமுன் அதை திரும்ப கொடுத்து விடு.

144. நியாயாதிபதிகளை தூஷியாமலும் அதிபதிகளை சபியாமலுமிரு.

145. முதல் முதல் பழுக்கும் உன் பழத்தையும் வடியும் உன் இரசத்தையும் காணிக்கையாக செலுத்த தாமதியாதே. உன் குமாரனில் முதல் பேரானவனை கர்த்தருக்கு கொடு.

146. தீமை செய்ய திரளான பேர்களை பின்பற்றாதே.

147. வழக்கிலே நியாயத்தை புரட்டாதே.

148. உன் சத்துருவின் கழுதை சுமையோடு விழுந்து கிடக்கக் கண்டால் அவனோடே கூட அதை தூக்க அவனுக்கு உதவி செய்.

149. எளியவனுடைய நியாயத்தைப் புரட்டாதே.

150. கள்ளக் காரியத்திற்கு தூரமாய் இரு.

151. பரிதானம் நீதிமான்களின் வார்த்தையை புரட்டும் ஆகவே பரிதானம் வாங்காதே.

152. ஆத்துமாக்களுக்கு பாவநிவிர்த்தி செய்ய கர்த்தருக்கு காணிக்கை செலுத்தும் போது அந்த பணத்தை ஆலய திருப்பணிக்கு கொடு.

153. ஓய்வுநாளில் வேலை செய்கிறவன் கொலை செய்யப்படக் கடவன்.

154. வார்ப்பிக்கப்பட்ட தெய்வங்களை உனக்கு உண்டாக்க வேண்டாம்.

155. வெறும் கையோடே என் சந்நிதியில் ஒருவனும் வரக்கூடாது.

156. ஒவ்வொரு வருடமும் விளைச்சலின் தசமபாகத்தை தேவனுக்கு கொடுக்க வேண்டும். ஆனால் ஒவ்வொரு 3ம் வருடமும் தசமபாகத்தை ஏழைகளுக்கு கொடுக்க வேண்டும். ஏழைகளுக்கு கொடுக்கும் இவ்வகை தானங்களை தமக்கு அளிப்பதாக தேவன் அங்கிகரித்தார்.

157. கர்த்தருக்கு **சர்வாங்க தகன** பலி செலுத்தும்போது, பழுதற்ற காளையை ஆசாரிப்புக் கூடார வாசலில் கொண்டு வந்து, தன் பாவ நிவிர்த்திக்காக தன் கையை அதில் மேல் வைத்து, கர்த்தருடைய சந்நிதியில் அந்த காளையை கொல்ல வேண்டும். அப்போது ஆசாரியர் இரத்தத்தை எடுத்து ஆசரிப்புக் கூடார வாசலில் இருக்கிற பலிபீடத்தில் சுற்றிலும் தெளிக்க வேண்டும். பின்பு அந்த சர்வாங்க தகனபலியை தோலுரித்து அதை சந்து சந்தாக துண்டித்து, ஆசாரியன் பலிபீடத்தின் மேல் அக்கினியை போட்டு அக்கினி மேல் கட்டையை அடுக்கி துண்டங்களையும் தலையையும் கொழுப்பையும் அந்த கட்டைகளின் மேல் அடுக்கி வைக்க வேண்டும். குடல்களையும் தொடைகளையும் தண்ணீரில் கழுவ வேண்டும். அதை ஆசாரியன் பலிபீடத்தின் மேல் சர்வாங்க தகன பலியாக தகனிக்க வேண்டும்.

சர்வாங்க தகனபலி பறவைகளில் செலுத்துவதாக இருந்தால் காட்டுப் புறாக்களிலாவது புறாக் குஞ்சுகளாவது செலுத்த வேண்டும்.

158. **போஜனபலி** செலுத்தும் போது காணிக்கை மெல்லிய மாவாக இருக்க வேண்டும். அதின் மேல் எண்ணை வார்த்து அதின்மேல்

தூபவர்க்கம் போட வேண்டும். ஆசாரியன் அதை எடுத்து பலிபீடத்தின் மேல் தகனிக்கக் கடவன். போஜன பலியில் மீதி இருப்பது ஆசாரியனுக்குரியது.

159. **சமாதான பலி** செலுத்தும் போது பழுதற்ற காளையோ பசுவோ செலுத்தலாம். பலியின் மேல் தன் கையை வைத்து ஆசரிப்புக் கூடார வாசலுக்கு முன்பாக அதைக் கொல்லக்கடவன். ஆசாரியன் அதின் இரத்தத்தை பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளிக்க வேண்டும். பின்பு குடலையும் கொழுப்பையும் இரத்தத்தையும் புசிக்கக் கூடாது.

160. **பாவநிவாரண பலியாக** ஒருவன் தான் செய்த பாவத்தினிமித்தம் ஒரு இளங்காளையை ஆசரிப்புக் கூடாரத்தில் கர்த்தருடைய சந்நிதியில் கொண்டு வர வேண்டும். அதின் மேல் தன் கையை வைத்து அதைக் கொல்ல வேண்டும். அப்பொழுது அபிஷேகம் பெற்ற ஆசாரியன் அந்த காளையின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து அதை ஆசரிப்புக் கூடாரத்தில் கொண்டு வந்து தன் விரலை இரத்தத்தில் தோய்த்து, பரிசுத்த ஸ்தலத்தின் திரைக்கு எதிரே கர்த்தருடைய சந்நிதியில் 7தரம் தெளிக்க வேண்டும். பின்பு ஆசாரியன் அந்த இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து ஆசரிப்புக் கூடாரத்திலே கர்த்தருடைய சந்நிதியில் இருக்கும் பலிபீடத்தின் கொம்புகளின் மேல் பூசி, காளையின் மற்ற இரத்தம் முழுவதையும் ஆசரிப்பு கூடார வாசலுக்கு முன்பாக இருக்கிற தகனபலிபீடத்தின் அடியில் ஊற்றிவிட வேண்டும்.

161. ஒருவன் இடப்பட்ட ஆணையை மற்றொருவன் சாட்சியாக கண்டும் அறிந்தும் இருந்து அதை தெரிவியாதிருந்தால் அவன் தன் அக்கிரமத்தை சுமப்பான்.

162. அசுத்தமான ஒரு வஸ்துவை ஒருவன் அறியாமல் தொட்டால் அவன் தீட்டும் குற்றமும் உள்ளவன்.

163. ஒருவன் தீமை செய்வதற்காவது, நன்மை செய்கிறதற்காவது தன் மனம் அறியாமல் தன் உதடுகளினால் பதறி ஆணையிட்டு பின்பு அவன் அதை அறிந்து கொண்டால் அவன் குற்றமுள்ளவனானான். தான் செய்தது பாவம் என்று அறிக்கையிட்டு பாவநிவாரன பலி செலுத்த வேண்டும்.

164. **குற்ற நிவாரண பலியாக**, ஒருவன் செய்யத் தகாதென்று கர்த்தருடைய கட்டளையினால் விலக்கப்பட்ட யாதொன்றை செய்து பாவத்திற்குட்பட்டவன் கர்த்தருக்கு விரோதமாக குற்றம் செய்ததினால் இந்த பலியை செலுத்த வேண்டும்.

165. பொய்யாணையிட்டு சம்பாதித்ததை திரும்ப கொடுக்கக் கடவன். அதோடு ஐந்தில் ஒரு பங்கை கூட்டிக் கொடுக்க வேண்டும்.

166. அவனவன் தன் தன் தாய்க்கும் தகப்பனுக்கும் பயந்திரு.

167. விக்கிரகங்களை வார்க்காமலும் வார்க்கப்பட்ட தெய்வங்களை உங்களுக்கு உண்டாக்கவும் வேண்டாம்.

168. ஒருவன் பயிரை அறுக்கும் போது வயலின் ஓரத்தில் இருக்கிறவைகளை தீர அறுக்க வேண்டாம். சிந்திக் கிடக்கிறவைகளை பொறுக்க வேண்டாம். அதை எளியவர்களுக்கும் பரதேசிக்கும் விட்டு விடு.

169. வஞ்சனை பண்ணாதே.

170. பிறனை ஒடுக்காதே. கொள்ளையிடாதே.

171. கூலிக்காரனுடைய கூலி விடியற்கால மட்டும் உன்னிடத்தில் இருக்கக் கூடாது.

172. செவிடனை நிந்தியாதே.

173. குருடனுக்கு முன் தடுக்கலை வைக்காதே.

174. நியாயவிசாரணையில் அநியாயம் செய்யாதே. சிறியவனுக்கு முகதாட்சணியம் செய்யாமலும் பெரியவனுடைய முகத்திற்கு அஞ்சாமலும் நீதியாக பிறருக்கு நியாயந் தீர்.

175. கோள் சொல்லித் திரியாதே.

176. பிறனுடைய இரத்தப் பழிக்கு உட்படாதே.

177. உன் சகோதரனை உன் உள்ளத்தில் பகையாதே.

178. பழிக்கு பழி வாங்காதே.

179. உன் ஜனத்தார் மேல் பொறாமை கொள்ளாதே.

180. உன்னிடத்தில் அன்பு கூறுவது போல பிறரிடத்திலும் அன்பு கூர்.

181. அடையாளமான எழுத்துக்களை உன்மேல் குத்திக் கொள்ளாதே.

182. அஞ்சனம் பார்க்கிறவர்களை நாடி குறி சொல்லுகிறவர்களை தேடாதிரு.

183. நரைத்தவனுக்கு முன்பாக எழுந்து முதிர் வயதுள்ளவன் முகத்திற்கு கனம் பண்ணி தேவனுக்கு பயந்திரு.

184. நியாய விசாரணையிலும், அளவிலும், நிறையிலும், படியிலும் அநியாயம் செய்யாதே.

185. சுமித்திரையான தராசும், சுமித்திரையான நிறைகல்லும், சுமித்திரையான படியும், உங்களுக்கு இருக்க வேண்டும்.

186. தன் பிள்ளையை விக்கிரகங்களுக்கு பலியிட்டவன் கொலை செய்யப்பட வேண்டும்.

187. ஒருவன் பிறனுடைய மனைவியோடே விபச்சாரம் செய்தால், அந்த விபச்சாரக்காரனும் அந்த விபச்சாரியும் கொலை செய்யப்படக்கடவர்கள்.

188. இஸ்ரவேலர் வனாந்திரத்தில் கூடாரங்களில் வாசம் பண்ணியதை நினைவு கூறும்படி **கூடாரப்பண்டிகை** கொண்டாட வேண்டும்.

189. கர்த்தர் எகிப்தியரை அதம் பண்ணி இஸ்ரவேலரை தப்பப் பண்ணினார். சங்காரக்காரனை இஸ்ரவேலரின் வீடுகளில் அவர்களை அதம் பண்ணுவதற்கு வரவொட்டாமல் கர்த்தர் காத்துக் கொண்டதை நினைவு கூறும்படி **பஸ்கா பண்டிகை** கொண்டாட வேண்டும்.

190. தலைப்பிள்ளை சங்காரம் எகிப்தில் நடக்கும்போது எகிப்தியர் நாங்கள் எல்லோரும் சாகிறோமே என்று தீவிரமாய் இஸ்ரவேலரை தேசத்திலிருந்து அனுப்பி விட்டனர். பிசைந்த மா புளிக்குமுன் இஸ்ரவேலர் அதை எடுத்து சுமந்து கொண்டு தீவிரமாக போனார்கள். அதை நினைவு கூறும்படி **புளிப்பில்லாத அப்ப பண்டிகையை** தலைமுறை தோறும் நித்திய நித்தியமாக கொண்டாட வேண்டும்.

191. கர்த்தரின் நாமத்தை நிந்திக்கிறவன் கொலை செய்யப்பட வேண்டும். சபையார் அவனை கல்லெறிய வேண்டும்.

192. ஒருவன் பிறனை ஊனப்படுத்தினால் அவன் செய்தபடியே அவனுக்கு செய்ய வேண்டும்.

193. மிருகத்தைக் கொன்றவன் மிருகத்திற்கு மிருகம் கொடுக்க வேண்டும்.

194. ஆறு வருடம் வயலை விதைத்து அதன் பலனை சேர்க்கலாம். ஏழாம் வருடம் கர்த்தருக்கென்று ஓய்வு தேசத்தில் இருக்க வேண்டும். அப்போது வயலை விதைக்கக் கூடாது.

195. ஏழாம் வருடத்தில் தானாக விளைந்தவைகள் உன் வேலைக்காரனுக்கும் வேலைக்காரிக்கும் கூலிக்காரனுக்கும் அந்நியனுக்கும் அது ஆகாரமாயிருக்கட்டும்.

196. உன் சகோதரன் (இஸ்ரவேலன்) தரித்திரப்பட்டு உனக்கு விலைப்பட்டுப் போனால் அவனை அடிமையைப் போல ஊழியஞ் செய்ய நெருக்காதே. அவனை கொடூரமாய் ஆளாமல் உன் தேவனுக்கு பயந்திரு.

கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தின்படியும் கட்டளைகளின்படியும் செய்கிறவர்களுக்குரிய ஆசீர்வாதங்கள்

1. நீ பட்டணத்திலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய் வெளியிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய்.

2. உன் கர்ப்பத்தின் கனியும் உன் மாடுகளின் பெருக்கமும் உன் ஆடுகளின் மந்தைகளுமாகிய உன் மிருக ஜீவன்களின் பலனும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும்.

3. உன் கூடையும், மாப்பிசைகிற உன் தொட்டியும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும்.

4. நீ வருகையிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய். போகையிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய்.

5. உனக்கு விரோதமாய் எழும்பும் உன் சத்துருக்களைக் கர்த்தர் உனக்கு முன்பாக முறிய அடிக்கும்படி ஒப்புக் கொடுப்பார். ஒரு வழியாய் உனக்கு எதிராக புறப்பட்டு வருவார்கள். ஏழு வழியாய் உனக்கு முன்பாக ஓடிப்போவார்கள்.

6. கர்த்தர் உன் களஞ்சியங்களிலும் நீ கையிடும் எல்லா வேலையிலும் உனக்கு ஆசீர்வாதம் கட்டளையிடுவார்.

7. கர்த்தர் உனக்கு கொடுக்கும் தேசத்தில் உன்னை ஆசீர்வதிப்பார்.

8. உன்னை தமக்கு பரிசுத்த ஜனமாக நிலைப்படுத்துவார்.

9. அப்பொழுது கர்த்தருடைய நாமம் உனக்கு தரிப்பிக்கப்பட்டது என்று பூமியின் ஜனங்களெல்லாம் கண்டு உனக்கு பயப்படுவார்கள்.

10. உன் கர்ப்பத்தின் கனியிலும் உன் மிருக ஜீவன்களின் பலனிலும், உன்

நிலத்தின் கனியிலும் உனக்குப் பரிபூரண நன்மை உண்டாகக் கட்டளையிடுவார்.

11. ஏற்றக் காலத்திலே உன் தேசத்திலே மழை பெய்யவும் நீ கையிட்டு செய்யும் வேலைகளையெல்லாம் ஆசீர்வதிக்கவும் கர்த்தர் உனக்கு தமது நல்ல பொக்கிஷசாலையாகிய வானத்தை திறப்பார்.

12. நீ அநேக ஜாதிகளுக்குக் கடன் கொடுப்பாய். நீயோ கடன் வாங்காதிருப்பாய்.

13. கர்த்தர் உன்னை வாலாக்காமல் தலையாக்குவார். நீ கீழாகாமல் மேலாவாய்.

14. பூமி தன் பலனையும் வெளியில் உள்ள மரங்கள் தங்கள் கனியையும் கொடுக்கும்.

15. நீங்கள் உங்கள் அப்பத்தை திருப்தியாகச் சாப்பிட்டு உங்கள் தேசத்தில் சுகமாய் இருப்பீர்கள்.

16. கர்த்தர் தேசத்தில் சமாதானம் கட்டளையிடுவார்.

17. தத்தளிக்கப்பண்ணுவார் இல்லாமல் படுத்துக் கொள்வீர்கள்.

18. துஷ்ட மிருகங்கள் தேசத்தில் இராதபடி ஒழியப்பண்ணுவார்.

19. பட்டயம் உங்கள் தேசத்தில் உலாவுவதில்லை.

20. உங்கள் சத்துருக்களை துரத்துவீர்கள்.

21. கர்த்தர் உங்கள் மேல் கண்ணோக்கமாயிருந்து உங்களை பலுகவும் பெருகவும் பண்ணுவார்.

கர்த்தருடைய நியாயப் பிரமாணத்தின்படி நடக்காதவர்களுக்கு வரும் சாபங்கள்:

1. நீ பட்டணத்திலும் சபிக்கப்பட்டிருப்பாய் வெளியிலும் சபிக்கப்பட்டிருப்பாய்.

2. உன் கூடையும், மாபிசைகிற உன் தொட்டியும் சபிக்கப்பட்டிருக்கும்.

3. நீ வீட்டைக் கட்டுவாய். நீ அதிலே குடி இருக்க மாட்டாய்.

4. உன் கர்ப்பத்தின் கனியும் உன் நிலத்தின் கனியும், உன் மாடுகளின் பெருக்கமும் உன் ஆடுகளின் மந்தைகளும் சபிக்கப்பட்டிருக்கும்.

5. நீ வருகையிலும் சபிக்கப்பட்டிருப்பாய். நீ போகையிலும் சபிக்கப்பட்டிருப்பாய்.

6. உன் துர்க்கிரியைகளினிமித்தம் நீ கையிட்டுச் செய்கிறதெல்லாவற்றிலும் கர்த்தர் உனக்கு சாபத்தையும் சஞ்சலத்தையும் கேட்டையும் வரப்பண்ணுவார்.

7. நீ நிர்மூலமாகுமட்டும் கொள்ளை நோய் உன்னை பிடித்துக் கொள்ளும்.

8. கர்த்தர் உன்னை ஈளையினாலும் காய்ச்சலினாலும் உஷ்ணத்தினாலும் எரிபந்தத்தினாலும் வறட்சியினாலும் கருக்காயினாலும், விஷப் பணியினாலும் வாதிப்பார். நீ அழியுமட்டும் இவைகள் உன்னை பின் தொடரும்.

9. உன் தலைக்கு மேலே உள்ள வானம் வெண்கலமும் உனக்கு கீழுள்ள பூமி இரும்புமாயிருக்கும்.

10. உன் தேசத்து மழையை கர்த்தர் புழுதியும் மண்ணுமாகப் பெய்யப் பண்ணுவார். நீ அழியுமட்டும் அப்படியே வானத்திலிருந்து உன்மேல் இறங்கி வரும்.

11. உன் சத்துருக்களுக்கு முன்பாக நீ முறிய அடிக்கப்படும்படி கர்த்தர் செய்வார். ஒரு வழியாய் அவர்களுக்கு எதிராகப் புறப்படுவாய் ஏழு வழியாய் அவர்களுக்கு முன்பாக ஓடி போவாய்.

12. நீ பூமியலுள்ள எல்லா ராஜ்யங்களிலும் சிதறுண்டு போவாய்.

13. உன் பிணம் ஆகாயத்து பறவைகளுக்கும் பூமியின் மிருகங்களுக்கும் இரையாகும். அவைகளை விரட்டு வாரில்லாதிருப்பார்கள்.

14. நீ குணமாகாதபடி கர்த்தர் உன்னை எகிப்தின் எரிபந்தமான பருக்களினாலும் மூல வியாதியினாலும், சொறியினாலும், சிரங்கினாலும் வாதிப்பார்.

15. கர்த்தர் உன்னை புத்தி மயக்கத்தினாலும், குருட்டாட்டத்தினாலும் இனத் திகைப்பினாலும் வாதிப்பார்.

16. குருடன் அந்தகாரத்திலே தடவித் திரிகிறது போல நீ பட்டப் பகலிலே தடவித் திரிவாய்.

17. உன் வழிகளில் ஒன்றும் உனக்கு வாய்க்காதே போம். உதவி செய்வாரில்லாமல் நீ எந்நாளும் ஒடுக்கப்படுகிறவனும் பறி கொடுக்கிறவனுமாயிருப்பாய்.

18. வீட்டை கட்டுவாய். அதில் குடி இருக்க மாட்டாய். திராட்சை தோட்டத்தை நாட்டுவாய். அதின் பலனை அனுபவிக்கமாட்டாய்.

19. உன் மாடுகள் உன் கண்களுக்கு முன்பாக அடிக்கப்படும். நீ அதில் ஒன்றும் புசிப்பதில்லை. உன் கழுதை உனக்கு முன்பாக கொள்ளையிட்டு கொண்டு போகப்பட்டு உனக்கு திரும்ப அகப்படாமல் போகும்.
20. உன் ஆடுகள் உன் சத்துருக்களுக்குக் கொடுக்கப்படும். விடுவிப்பார் ஒருவரும் உனக்கு இல்லாதிருப்பார்கள்.
21. உன் குமாரரும், உன் குமாரத்திகளும் அந்நிய ஜனங்களுக்கு ஒப்புக் கொடுக்கப்படுவார்கள். அவர்களைக் காண உன் கண்கள் நாடோறும் பார்த்துப் பார்த்து பூத்துப்போம். உன் கையில் பலனில்லாதிருக்கும்.
22. உன் நிலத்தின் கனியையும், உன் பிரயாசத்தின் எல்லா பலனையும் நீ அறியாத ஜனங்கள் புசிப்பார்கள். நீ சகல நாளும் ஒடுக்கப்பட்டும் நொறுக்கப்பட்டும் இருப்பாய்.
23. உன் கண்கள் காணும் காரியங்களினாலே மதிமயங்கிப் போவாய்.
24. உன் உள்ளங்கால் தொடங்கி உன் உச்சந்தலை மட்டும் குணமாகாதபடிக்கு கர்த்தர் உன்னை முழங்கால்களிலும், தொடைகளிலும் கொடிய எரிபந்தப் பருக்களினாலே வாதிப்பார்.
25. எல்லா ஜனங்களுக்குள்ளும் பிரமிப்பும் பழமொழியும் பரியாசச் சொல்லுமாவாய்.
26. மிகுந்த விதையை வயலுக்குக் கொண்டு போவாய். கொஞ்சம் அறுப்பாய். வெட்டுக்கிளி அதை பட்சித்துப் போடும்.
27. திராட்ச தோட்டங்களை நாட்டி பயிரிடுவாய். ஆனாலும் திராட்ச ரசம் குடிப்பதும் இல்லை. திராட்சைப் பழங்களைச் சேர்ப்பதும் இல்லை. பூச்சி அதைத் தின்று போடும்.
28. ஒலிவ மரங்கள் உன் எல்லைகளிலெல்லாம் இருக்கும். ஆனாலும் அதின் என்ணையை பூசிக் கொள்வதில்லை. உன் ஒலிவ மரத்தின் பிஞ்சுகள் உதிர்ந்து போகும்.
29. நீ குமாரரையும் குமாரத்திகளையும் பெறுவாய். ஆனாலும் அவர்கள் உன்னோடு கூட இரார்கள். அவர்கள் சிறைப்பட்டு போவார்கள்.
30. உன் மரங்கள் எல்லாவற்றையும், உன் நிலத்தின் கனிகளையும் விட்டில் பட்சித்துப் போடும்.
31. உன் நடுவில் இருக்கிற அந்நியன் உனக்கு மேற்பட்டு மேன்மேலும் உயர்ந்திருப்பான். நீ மிகவும் தாழ்த்தப்பட்டு போவாய்.

32. அவன் உன்னிடத்தில் கடன் படான். நீ அவனிடத்தில் கடன் படுவாய். அவன் தலையாயிருப்பான் நீ வாலாயிருப்பாய்.
33. சகலமும் பரிபூரணமாயிருக்கையில் நீ மன மகிழ்ச்சியோடு கர்த்தரை சேவியாமல் போனதினால் சகலமும் குறைபட்டு பட்டினியோடும், தாகத்தோடும் நிர்வாணத்தோடும் உன் சத்துருக்களை சேவிப்பாய்.
34. கிழவன் என்று முகம் பாராமலும் வாலிபன் என்று இரங்காமலும் இருக்கும் கொடிய முகமுள்ளதும் உனக்கு, தெரியாத பாஷையை பேசுகிற அந்நிய ஜாதி பூமியின் கடையாரந்திரத்திலிருந்து கழுகு பறக்கும் வேகமாய் உன்மேல் வரப்பண்ணுவார் அவன் உன்னை அழிப்பான்.
35. நீ நம்பி இருக்கிற உயரமும் அரணிப்பான உன் மதில்கள் விழும்.
36. உன் சத்துருக்கள் உன்னை நெருக்குங்காலத்தில் உன் கற்பக் கனியான உன் புத்திரரின் மாம்சத்தைத் தின்பாய்.
37. சுக செல்வியான செருக்குள்ள உன்னிடத்திலுள்ள ஸ்திரி, தன் பிள்ளைகளிடமும் புருஷன் மேலும் வன் கண்ணாயிருப்பாள்.
38. நீங்காத பெரிய வாதைகளினாலும், நீங்காத கொடிய ரோகங்களினாலும் உன்னையும் உன் சந்ததியையும் வாதிப்பார்.
39. எகிப்தின் வியாதிகள் எல்லாம் நீ அழியுமட்டும் உன்மேல் வரும். கர்த்தர் உங்களை அழிக்கவும் உங்களை அதம் பண்ணவும் இரம்மியமாயிருப்பார். நீங்கள் சுதந்தரிக்கப் போகிற தேசத்திலிருந்து உங்களை பிடுங்கிப் போடுவார்.
40. பூமியின் ஒரு முனை துவங்கி பூமியின் மறுமுனை மட்டும் இருக்கிற எல்லா ஜனங்களுக்குள்ளும் உன்னை சிதறடிப்பார். அங்கே நீ மரமும் கல்லுமான அந்நிய தேவர்களை சேவிப்பாய்.
41. அங்கே உனக்கு இளைப்பாறுதல் இராது. உன் உள்ளங்கால் தங்கித் தரிக்க இடமும் இராது. கர்த்தர் உனக்கு தத்தளிக்கிற இருதயத்தையும், சோர்ந்து போகிற கண்களையும் மனச் சஞ்சலத்தையும் கொடுப்பார்.
42. உன் ஜீவன் உனக்கு சந்தேகத்தில் ஊசலாகும். உன் ஜீவனைப் பற்றிய நம்பிக்கை இல்லாமல் இரவும் பகலும் திகில் கொண்டிருப்பாய்.
43. நீ பயப்படும் உன் இருதயத்தின் திகிலினாலும், உன் கண்கள் காணும் காட்சியினாலும் விடியற்காலத்தில் எப்பொழுதும் சாயங்காலம் வருமோ என்றும் சாயங்காலத்தில் எப்பொழுது விடியற்காலம் வருமோ என்றும் சொல்லுவாய்.

44. கர்த்தர் திரும்ப உன்னை சத்துருக்களின் தேசத்திற்கு கொண்டு போவார். அங்கே உன் சத்துருக்களுக்கு வேலைக்காரராக இருப்பீர்கள்.

45. உங்கள் கண்கள் பூத்துப்போகப் பண்ணுவதற்கும் இருதயத்தை துயரப்படுத்துகிறதற்கும் திகிலையும், ஈளையையும் காய்ச்சலையும் கர்த்தர் உங்களுக்கு வரப் பண்ணுவார்.

46. கர்த்தர் உங்களுக்கு விரோதமாக அவருடைய முகத்தை திருப்புவார்.

47. உங்கள் பெலன் விருதாவிலே செலவழியும்.

48. உங்கள் தேசம் தன் பலனையும் தேசத்தின் மரங்கள் தங்கள் கனிகளையும் கொடுக்கமாட்டாது.

49. கொள்ளைநோயை உங்கள் நடுவில் அனுப்புவார்.

50. உங்கள் அப்பம் என்னும் ஆதரவு கோலை கர்த்தர் முறித்து போடுவார். நீங்கள் சாப்பிட்டும் திருப்தியடைய மாட்டீர்கள்.

51. உங்கள் மேடைகளை அழித்து உங்கள் விக்கிர சிலைகளை நிர் துளியாக்குவார்.

52. உங்கள் பட்டணங்களை வெறுமையும், உங்கள் பரிசுத்த ஸ்தலங்களை பாழுமாக்குவார்.

53. ஜாதிகளுக்குள்ளே உங்களை சிதறடித்து உங்கள் பட்டணங்கள் வனாந்திரமாகும்.

54. அசைகிற இலைகளின் சத்தமும் உங்களை ஓட்டும். நீங்கள் பட்டயத்திற்கு தப்பி ஓடுகிறதுபோல ஓடி, துரத்துவார் இல்லாமல் ஒருவர் மேல் ஒருவர் இடறி விழுவீர்கள்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நமக்காக நம்முடைய பாவங்களுக்காக பாவநிவாரண பலியாக நம்முடைய குற்றங்களுக்காக குற்ற நிவாரண பலியாக நமக்கு சமாதானம் அருளும் படியாக சமாதான பலியாக நமது பாவங்களுக்கு பிராயசித்தமாக, முற்றிலுமாக விடுதலை கொடுக்கும்படியாக, சர்வாங்க தகன பலியாக தன்னையே ஒப்புக் கொடுத்தார். தன்னுடைய கடைசி துளி இரத்தத்தையும் நமக்காக சிந்தினார். அவருடைய ஒவ்வொரு அங்கமும் நமக்காக சிலுவையில் தகனிக்கப்பட்டது. அவருடைய இரத்தத்தில் இன்று நமக்கு விடுதலை

கிடைத்துள்ளது. நியாயப் பிரமாணம் நமக்கு நீதியை போதித்தது. பரிசுத்தமாக வாழ வழி காட்டியது. பாவங்களை சுட்டிக் காட்டியது. பலிகளை செலுத்தி பாவ மன்னிப்புகளை ஜனங்கள் பெற்றார்கள். ஆனால் பாவத்திலிருந்து விடுதலை இல்லை. இயேசு கிறிஸ்து சர்வ அங்க தகன பலியாக முற்றிலுமாக தன்னை பலி ஆடாக ஒப்புக் கொடுத்து இரத்தம் சிந்தினார். அந்த இரத்தத்தின் வல்லமையால் இன்று நமக்கு பாவங்களிலிருந்து விடுதலை கிடைத்துள்ளது. நம்முடைய பாவங்களுக்காக நியாயமான பிரகாரமாக நமக்கு வரவேண்டிய தண்டனையை அவர் பெற்று பிணையாளியானார். நாம் மரிக்க வேண்டிய இடதகில் அவர் மரித்து நமக்கு விடுதலை கொடுத்தார். இன்று நாம் இயேசு கிறிஸ்துவினால் மீட்கப்பட்டவர்கள்.

மீட்கப்பட்ட நாம் நம் ஆண்டவர் காட்டிய பரிசுத்தமான வழியில் சென்று அவருடைய ஆவிக்குரிய புதிய பிரமாணங்களை கடைபிடித்து பரம கானானை நோக்கி அடி எடுத்து வைப்போம்.

நம்முடைய தேவனாகிய கர்த்தரை தொழுது கொள்ளும் போதெல்லாம் அவர் நமக்கு சமீபமாயிருக்கிறது போல தேவனை இவ்வளவு சமீபமாய் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதி எது? உபா.4:7

இவ்விதமாக நாம் விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப் படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மை கிறிஸ்துவினிடத்தில் வழி நடத்துகிற உபாத்தியாய் இருந்தது. விசுவாசம் வந்த பின் நாம் உபாத்திக்கு கீழானவர்கள் அல்ல. கலா.3:24,25

நியாயப் பிரமாணம் நம்மால் சுமக்க முடியாத பாரம். ஆனால் இயேசு கிறிஸ்து நியாயப்பிரமாணத்தை சிலுவையில் நிறைவேற்றினார். இன்று நாம் தேற்றரவாளனால் வழி நடத்தப்படுகிற ஆவிக்குரிய பிள்ளைகள். நியாயப்பிரமாணத்தின் சாபத்திலிருந்து நாம் விடுதலை பெற தேவன் தம் ஜீவனைக் கொடுத்தார். இயேசு நம்மை அதிகமாக நேசித்தபடியால் தம் ஜீவனை நமக்காக கொடுத்தார். நாம் அவருடைய கற்பனைகளுக்கு கீழ்படியும் போது அவர் நம்மை நியாயப் பிரமாணத்தின் சாபத்திலிருந்து மீட்பதாக வாக்கு பண்ணியுள்ளார்.

கேள்விகளும் பதில்களும்

1. பாவம் என்றால் என்ன?

சட்டத்தை மீறுவதே பாவம். ஆதாமிற்கு தேவன் கொடுத்த சட்டம், இந்த பழத்தை புசிக்க வேண்டாம் என்பதே. இந்த ஒரே சட்டத்தை அவன் மீறினான். எனவே அவன் பாவம் செய்தான். அவனுடைய சந்ததியாக நாம் பிறந்ததினால் நாம் பிறப்பிலேயே பாவம் உடையவர்களானோம்.

2. மனம் திரும்புதல் - மறுபடி பிறத்தல் என்றால் என்ன?

பாவ வழியில் சென்று கொண்டிருக்கும் ஒருவன் அல்லது ஒருத்தி தான் செல்லும் பாதையை தவறு என்று உணர்ந்து அந்த பாதையை விட்டு திரும்பி வருவதே மனம் திரும்புதல் ஆகும். அப்படி திரும்பி வந்த நபர் சரியான பாதையை தெரிந்து கொண்டு அந்த செம்மையான பாதையில் செல்வதே மறுபடியும் பிறத்தல் ஆகும்.

3. இயேசுவின் பிறப்பு எல்லா ஜனத்திற்கும் மிகுந்த மகிழ்ச்சி ஏன்?

மனிதன் பாவம் என்ற பிரச்சனையால் தேவனுக்கு தூரமாக்கப் பட்டான். இந்த பாவத்தை சுமந்து தீர்க்கவே இந்த பரிசுத்த தேவன் பிறந்தார். இந்த நற்செய்தியை உலகில் உள்ள எல்லா இனத்தவரும் மதத்தினரும் அறிய வேண்டும் என்பது தேவனின் திட்டம். ஆகவேதான் எல்லா ஜனத்திற்கும் சந்தோஷமான நற்செய்தி என்று தூதர்கள் சொல்லுகிறார்கள். அவரிடம் வருபவர்கள் எந்த மதத்தினராக இருந்தாலும் அவர் தள்ளுவதில்லை அவரிடம் வரும் எல்லோருக்கும் இரட்சிப்பு உண்டு. எனவே அவருடைய பிறப்பு எல்லா ஜனத்திற்கும் சந்தோஷமான செய்தியாகும்.

4. இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்.

நான் பாவி என்று ஒத்துக் கொள். ஆண்டவருக்குப் பிரியமில்லாத, நாம் போய் கொண்டிருந்த பாதையை விட்டு திரும்பு. நம்முடைய சுயத்தைவிட்டு ஆண்டவரை நோக்கி திரும்புவதே மனம் திரும்புதல். இயேசு என்னுடைய பாவங்களை மன்னிப்பதற்காக சிலுவையில் மரித்தார் என்று விசுவாசி. என்னுடைய பாவங்களுக்கு தம்முடைய

இரத்தத்தை விலைக்கிரயமாக செலுத்தி தம்முடைய இரத்தத்தால் என்னை கழுவி என்னை இரட்சித்தார் என்று நம்பு.

5. நான் ஒரு பரிசுத்தமான வாழ்க்கை நடத்த முடியுமா?

நாம் நல்ல செயல்களை செய்வதால் பரிசுத்தமாக முடியாது. இயேசு கிறிஸ்துவினால் இரட்சிக்கப்பட்டால் மட்டுமே, விசுவாசத்திலேயே நாம் பரிசுத்தமாக்கப்படுகிறோம். கொஞ்சம் கொஞ்சமாக அவருக்குள் வளர்ந்து அவரோடு வாழ்கிறோம். அவரைப் போலவே மாறுகிறோம். ஆவியாயிருக்கிற கர்த்தரால் அவருடைய சாயலாகத்தானே மகிமையின் மேல் மகிமை அடைந்து மறுரூபமாகிறோம். அவரையே நோக்குவதால், அவரைப் பற்றியே நினைப்பதால் அவரைப் பற்றியே படிப்பதினால் அவரிடம் ஜெபிப்பதினால், அவருடைய மாதிரிகளை பின்பற்ற முயற்சிப்பதால் அவரைப் போலவே மாறுகிறோம். நீ ஒரு இரட்சிக்கப்பட்ட நபராக இருந்தால் நிச்சயமாகவே, நீ அவரை நெருங்கி வாழ்வதால் இன்னும் சில ஆண்டுகளுக்குள் உன் விருப்பங்களும், எண்ணங்களும் முற்றிலும் மாறி பரிசுத்தமுள்ள ஒரு வாழ்க்கை வாழ முடியும்.

நீங்கள் இந்த உலகிற்கு தக்கதாக வேஷம் தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.

6. தேவனுடைய சித்தத்தை எப்படி அறியலாம்?

1. தேவனுடைய வசனம் மூலம் அறியலாம் (என் கால்களுக்கு தீபமும் என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது)

2. ஜெபத்தின் மூலம் அறியலாம்.

3. சூழ்நிலைகள் மூலமாக

4. தேவனுடைய மெல்லிய சத்தம் மூலமாக.

5. சொப்பனங்கள், தரிசனங்கள் மூலமாக.

6. தேவ பிள்ளைகள் மூலமாக.

7. தேவனிடம் ஒரு அற்புதத்திற்காக எப்படி ஜெபித்து பெறலாம்?

இதோ சர்ப்பங்களையும், தேள்கள்ளையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரம் கொடுக்கிறேன் ஒன்றும் உங்களை சேதப்படுத்த மாட்டாது.

. தேவன் நமக்கு வியாதி, பிசாசு, உலகம், பணம் இவற்றின் மேல் அதிகாரம் கொடுத்துள்ளார். அற்புதம் என்பது நமது சடங்காச்சாரங்களிலோ, மனித செயலினாலோ, நடப்பது அல்ல. கர்த்தர் உனக்கு கொடுக்கிற விசுவாசத்தினாலேயே நடப்பதாகும். கர்த்தர் நிச்சயம் செய்வார் என்று இருதயத்தில் நம்பு. அதுவே அற்புதத்தை நடைபெறச் செய்யும்.

8. மன்னிக்க முடியாத பாவம் எது?

எந்த பாவமும் தூஷணமும் மனுஷருக்கு மன்னிக்கப்படும். ஆவியானவருக்கு விரோதமான தூஷணமோ மனுஷருக்கு மன்னிக்கப்படுவதில்லை. இயேசு ஞானஸ்நானம் பெறும்போது ஆவியானவர் அவருக்குப் புறாவைப்போல இறங்குகிறார். அந்த வல்லமையினால் இயேசு அற்புதம் செய்தார். ஆனால் யூதர்கள் அவரை பிசாசுகளின் தலைவனாகிய பெயர்செபூலைக் கொண்டு அற்புதங்களை செய்கிறார் என்றார்கள். அதன் பலனை அறுத்தார்கள்.

9. சாத்தான் மேல் வெற்றிக் கொள்வது எப்படி?

உலகத்தில் இருப்பவரிலும் உங்களில் இருப்பவர் பெரியவர். ஆகவே நாம் சாத்தானை ஜெயிக்க முடியும். இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களை அனுப்பும் போது சத்துருவின் சகல வல்லமைகளையும் மேற்கொள்ள அதிகாரம் கொடுத்தார். இயேசுவின் வல்லமை, சாத்தானின் வல்லமையை விட பெரியது. இயேசுவின் சீடர்கள் ஆண்டவரே உம்முடைய நாமத்திலே பிசாசுகளும் நடுங்குகின்றன என்று சொல்லும்போது பிசாசுகள் உங்களுக்கு கீழ்படிவதற்கு சந்தோஷபட வேண்டாம். பரலோகத்திலே உங்கள் பெயர் எழுதப்பட்டிருப்பதற்காக சந்தோஷப் படுங்கள் என்றார். பரலோக ராஜ்யத்தின் மகிமைகளும், அதிகாரங்களும், இயேசுவின் நாமத்தினாலே பிசாசுகள் மேல் உள்ள அதிகாரங்களை விட சிறந்தது.

10. தேவன் எதிர்த்து நிற்கும் பாவம் எது?

மிகப் பெரிய பாவம் பெருமை. பெருமையையும், அகந்தையையும், தீய வழியையும், புரட்டு வாயையும் நான் வெறுக்கிறேன். பெருமை உள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார் என்று வேதம் சொல்லுகிறது.

தேவன் எதிர்த்து போராடும் மிகப் பெரிய பாவம் பெருமை. பெருமை என்பது தேவனுக்கு விரோதமான பகை. பெருமை என்பது நம்மை சுய திருப்தி என்னும் மன மேட்டிமைக்கு இழுக்கிறது. எனவே தேவனை விட்டு தூர விலகி போக ஏதுவாகிறது. பெருமை சாத்தானின் அடிப்படை பாவம் லூசிபரை விழத்தள்ளிய பாவம் இந்த பெருமையே.

11. தேவன் சபிக்கும் பாவம் எது?

மாய்மாலம், விபச்சாரத்தில் கையும் மெய்யுமாக பிடிபட்ட பெண்ணைக் கூட தேவன் சபிக்கவில்லை. ஆனால் மாய்மாலக்காரராகிய பரியேசரைப் பார்த்து உங்களுக்கு ஐயோ என்றார். வானத்தையும், பூமியையும் படைத்த மாபெரும் தேவன் ஏன் ஒரு அத்தி மரத்தை சபிக்க வேண்டும்? அது மாய்மாலத்தின் சின்னமாக வழிப்போக்கரை ஏமாற்றிக் கொண்டிருந்தது. அதுபோல நாமும் மாய்மாலமான வாழ்க்கை வாழ்ந்து ஆவியின் கனிகள் நம்மிடம் காணப்படாவிட்டால் கர்த்தருடைய சாபத்தையே பெற வேண்டியதிருக்கும்.

12. தேவன் விரும்புவது எது?

நான் பரிசுத்தர் ஆகவே நீங்களும் பரிசுத்தராக இருங்கள். உங்களை அழைத்தவர் பரிசுத்தராக இருப்பது போல நீங்களும் உங்கள் நடக்கை எல்லாவற்றிலும் பரிசுத்தராயிருங்கள் என்று வேதம் சொல்லுகிறது. தேவன் நம்முடைய பரிசுத்தத்தையே விரும்புகிறார்.

13. நான் பரிசுத்தமடைய என்ன செய்ய வேண்டும்?

தேவன் நம்மேல் கொண்ட அன்பினால் எல்லாவற்றையும் செய்து முடித்துவிட்டார். நம்முடைய பாவங்களுக்காக தேவன் இயேசுகிறிஸ்துவை உலகிற்கு அனுப்பி நமக்காக சிலுவையில் மரிக்கச் செய்தார். ஆகவே நாம் நம்முடைய பாவங்கள் மன்னிக்கப் பட்டவர்களாகி பரிசுத்தமாகி அவருடைய பிள்ளைகளாகிறோம். இந்த இரட்சிப்பின் வழி யாவருக்கும் திறந்திருக்கிறது. நீ எப்படிபட்ட பாவியாக இருந்தாலும் எதுவும் உன்னை தேவனிடத்தில் வருவதை தடை செய்ய முடியாது. அவர் தம்முடைய செயலை செய்து முடித்து விட்டார். நம்முடைய வேலையை செய்வதற்காக நம்மை அழைக்கிறார். நீ உன் இதயத்தை திறந்து அவரை நோக்கி கூப்பிடு.

14. இயேசு எவ்வாறு பிணையாளியானார்?

இயேசு பொறுப்பேற்கிறார். நாம் நம்முடைய பாவங்களுக்கு ஏற்ற தண்டனையை செலுத்தி தீர்க்கிறதற்கு பதிலாக இயேசு பிணைகைதியானார். பிதாவே நான் இவர்களை பரலோகத்தில் கொண்டு வருவதற்கு நானே பொறுப்பு. நானே உத்தரவாதம் என்கிறார். பழைய ஏற்பாட்டு காலத்தில் பிணை கைதியாக, கிடாரி, புறா பலியிடப்பட்டது. மனிதன் கொல்லப்பட வேண்டிய இடத்தில் கிடாரி பிணையாளியானது. இயேசு நம்முடைய பாவங்களுக்காக நாம் அனுபவிக்க வேண்டிய பாடுகளை, தண்டனையை அனுபவித்து நமக்கு விடுதலை வாங்கி தந்தவர்.

15. மனுஷனுடைய கடைசி காலத்தை சாலமோன் எவ்வாறு சித்திரிக்கிறார்?

மனுஷனுடைய கடைசி காலம் தீங்கு நாட்களாகத்தான் இருக்கும். யோபு இறுதி நாட்களைப் பற்றி சிறிது கூறினார். ஆனால் சாலமோன் இறுதி நாட்களைப் பற்றி திட்டவட்டாக கூறுகிறார். பிரசங்கி 12 : 3 ல் குறிப்பிட்டது போல திரும்ப திரும்ப வியாதிகள், துன்பங்கள் வரும் ஒரு காலமாக இறுதி காலம் உள்ளது.

வீட்டு காவலாளி தள்ளாடி போய்	-	கால்கள் தள்ளாடுகின்றன.
பலசாலிகள் கூனிப்போய்	-	முதுகு தண்டு, எலும்பு கூனிப்போய் விடுகின்றன.
இயந்திரம் அரைக்கிறவர்கள் கொஞ்சமாவதினால் ஓய்ந்து	-	பற்கள் விழுந்து போவதால் சரியாக சாப்பாட்டை அரைக்க முடிவதில்லை.
பலகனிவழியாய் பார்க்கிறவர்கள் இருண்டு போகு முன்	-	கண் பார்வை மங்குவதால் சரியாக பார்க்க முடிவதில்லை.
தெருவாசல் கதவு அடைபட்டு	-	காதுவாசல் குறுகி போவதால் நன்றாக கேட்க முடிவதில்லை.
கீத வாத்திய கண்ணியர்கள் அடங்கு முன்	-	குரல் நாண் அடங்குவதால் சரியாக பேச முடிவதில்லை

மேட்டுக்காக அச்சம் உண்டாகி	–	சின்ன மேட்டில் கூட பயம் உண்டாகுகிறது.
வாதுமை மரம் பூ பூத்து	–	முடி வெண்மையாகிறது. (பாலஸ்தீனாவில் வாதுமை பூ வெண்மையாக இருக்கும்.)
வெட்டுக்கிளி பாரமாகிறது	–	நம் உடலில் ஒரு வெட்டுக்கிளி உட்கார்ந்தால் கூட அது பாராமாக தோன்றும்.
பசி தீவனம் அற்றுப் போதல்	–	சாப்பாடு குறைகிறது.

மனிதன் தன் நித்திய வீட்டிற்கு போகிறதினாலே துக்கம் கொண்டாடுகிறவர்கள் வீதியிலே திரியும் காலத்திற்கு முன்.

வெள்ளிக் கயிறு கட்டு விட்டு	–	நரம்பு மண்டலம் நிலைகுலைந்து விடுகிறது.
பொற்கிண்ணி நசுங்கி	–	சிறுநீரகங்கள் செயலற்று போகிறது.
ஊற்றுசால் உடைந்து	–	இருதயம், இரத்த குழாய்கள் வெடித்து இரத்தம் வருகிறது.
துரவண்டை உருளை நொறுங்கி	–	சுரப்பிகள் உடைந்து நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து போகிறது.
மண் பூமிக்குத் திரும்பி	–	சரீரம் தான் முன்னிருந்த மண்ணுக்கு திரும்புகிறது.
ஆவி தேவனித்திற்கு போகாததற்கு முன்	–	ஆவி தேவனிடம் போய் சேருகிறது.

இவை எல்லாம் நடைபெறும் முன்பு உடம்பில் சுகம், பெலன் இருக்கும்போதே தேவனைப் பற்றிக் கொண்டு நித்திய வாழ்வை பெற்றுக் கொள்.

16. பஸ்கா ஆட்டுக் குட்டி என்பது யாது?

இஸ்ரவேல் ஜனம் எகிப்திலிருந்து மீட்கப்படும்படி ஒரு வயது வெள்ளாட்டு

குட்டி தெரிந்தெடுக்கப்பட்டு இரத்தம் சிந்தப்பட வேண்டி இருந்தது. அதற்கு பஸ்கா ஆட்டுக்குட்டி என்று பெயர். இந்த பஸ்கா ஆடு நமக்காக சிலுவையில் பாவம் சுமந்து தீர்க்க வெளிப்பட்ட இயேசு கிறிஸ்துவுக்கு நிழலாட்டம் ஆகும்.

17. பழைய ஏற்பாட்டு கால மக்களுக்கு பாவத்திலிருந்து விடுதலை கிடைத்ததா?

கிடைக்கவில்லை. அவர்களுக்காக பலியான மிருகங்களின் இரத்தம் குற்றமுள்ளது. விலை மதிப்பில்லாதது. சிருஷ்டிகளின் பிரதானமான மனிதனை மீட்க அந்த மிருகங்களின் இரத்தத்தால் முடியவில்லை. ஆனால் மனிதனை உண்டாக்கிய இயேசுவின் இரத்தம், சிருஷ்டி கர்த்தாவின் இரத்தம், குற்றமற்ற மாசற்ற விலையேறப்பட்ட இரத்தம், மனிதனுக்காக சிந்தப்பட்டவுடன் அவர்கள் அக்கிரமம் நிவிர்த்தியாக்கப்பட்டது. பாவங்கள் மன்னிக்கப்பட்டன. பாவத்திலிருந்து விடுதலை கிடைத்தது.

18. தேவன் சாத்தானை கட்டி உடனே நரகத்தில் தள்ளி விடாமல் அவனை இன்னும் விட்டு வைக்க காரணம் என்ன?

1. நாம் அவரை இடைவிடாமல் தேட வேண்டும் என்பதற்காக
2. அவரை பற்றிக் கொண்டு விசுவாசத்தில் முன்னேற வேண்டும்.
3. நம்முடைய எண்ணங்களும், சிந்தனைகளும் இடைவிடாமல் அவர் மேலேயே பதிந்து கொண்டிருக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்ப்பதினால்.

அந்த முள் (சாத்தான் கொடுக்கும் சில வேதனைகள்) வாழ்க்கையில் இல்லாமல் போனால் நாம் சுகபோகத்தில் மூழ்கி கர்த்தரை முற்றிலும் மறந்து விடுவோம்.

19. நாம் எவ்வாறு கிரயத்திற்கு கொள்ளப்பட்டோம்?

நாம் பாவத்திற்கும் அக்கிரமத்திற்கும் பிசாசிற்கும் அடிமைகளாக இருந்தோம். இயேசுகிறிஸ்து தமது இரத்தத்தின் மூலம் நம்மை மீட்டார். தம்முடைய இரத்தத்தை கிரயமாக கொடுத்து பிசாசின் பிடியிலிருந்து

நம்மை மீட்டு இரட்சித்தார். நாம் கிரயத்திற்கு வாங்கப்பட்டவர்கள். நாம் நம் எஜமானாகிய இயேசுவையே எப்பொழுதும் சேவிப்போம்.

20. இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட பின்பும் ஏன் சில கஷ்டங்கள் இருந்து கொண்டே இருக்கின்றன?

இந்த கஷ்டங்கள் தான் கிருபையின் முட்களாகும். பவுலுக்குக் கூட இந்த முள் கொடுக்கப்பட்டிருந்தது. தேவன் இதை அனுமதித்திருந்தார். அது சாத்தானுடைய தூதனாக இருந்தது. அது இடைவிடாமல் குத்தி வேதனைப் படுத்தும். தனக்கு கிடைத்த தேவ கிருபையையும் மேன்மையான அனுபவங்களையும் குறித்து பெருமை பாராட்டாதபடி கிறிஸ்துவை மாத்திரமே அனுதினமும் சார்ந்து கொள்வதற்காக தேவன் அந்த முள்ளை அனுமதிக்கிறார்.

21. பலி ஆடு யார்? போக்காடு யார்?

பாவ நிவாரண பலியாக 2 வெள்ளாட்டுக் கடா கொண்டு வரப்படும். பிரதான ஆசாரியன் சீட்டு போடுவான். கர்த்தருக்கென்று குறிக்கப்பட்டது பலியிடப்படும். மற்றது போக்காடாக தேர்ந்து எடுக்கப்படும். இது கொல்லப்படாமல் வனாந்திரத்திற்கு ஓட்டி விடப்படும். பலி ஆடு கொல்லப்பட்டு அதன் இரத்தம் 7 முறை இஸ்ரவேல் ஜனங்கள் மீது சுத்திகரிப்புக்காக தெளிக்கப்படும். கடைசி பஸ்கா இயேசு கிறிஸ்துவே. இயேசுவே இரத்தம் சிந்தி மரிக்கும் பலி ஆடாகும் பரபாஸ் போக்காடாக கூறப்படுகிறது.

22. யார் இந்த அந்தகார லோபாதிபதிகள்? இவர்கள் எங்கிருந்து வந்தார்கள்?

இவர்கள் தேவனோடு இருந்து தேவனை துதித்துப் பாடவும் பணிவிடை செய்யவும் உண்டாக்கப்பட்ட தேவதூதர்கள், லூசிபர் என்ற இவர்களது தலைவனோடு சேர்ந்து பெருமையினாலும் அகந்தையினாலும் விழுந்து போன தேவதூதர்கள், தேவன் அதிகமாக நேசிக்கிற மனிதனை தேவன் மீது கொண்ட கோபத்தினால் பிரிக்க அழிக்க சதிவலைகளை விரிக்கின்ற பொல்லாத ஆவிகள், மரித்தோரைப் போல பேசி ஜனங்களை வஞ்சிக்கிற ஆவிகள். இப்படிப்பட்ட ஆவிகளோடு நமக்கு போராட்டம் உண்டு. சாத்தானின் சகல வல்லமையையும் மேற்கொள்ள நமக்கு தேவன்

அதிகாரம் கொடுத்திருக்கிறார். உங்களால் கூடாத காரியம் ஒன்றுமில்லை என்று சொல்லி இருக்கிறார். எனவே இந்த பொல்லாத ஆவிகளோடு போராடி அவைகளின் வல்லமைகளை மேற்கொள்ள முடியும். இவ்வகை ஆவிகள் தான் விசுவாச போராட்டத்தையும் கொண்டு வருகின்றன.

23. தேவனுடைய சாபம் எவ்வாறு நீங்குகிறது?

இஸ்ரவேலர் காலத்தில் பாவம் சாபம் இவை நீங்க பலிகளை கட்டளை இட்டார். லேவி.16:10. பாவம் நீங்க இரத்தம் தேவைப்பட்டது. நம்முடைய பாவம், சாபம் நீங்கி நித்திய வாழ்வை நமக்கு கொடுக்க நிரந்தர பலி செலுத்தப்பட வேண்டியதாயிற்று. எனவே குமாரனை சிலுவையில் ஒப்புக் கொடுத்தார். ஆகவே இயேசு கிறிஸ்து நம்முடைய பாவம், சாபம் நீங்கி நித்தியத்திற்கு நம்மை தகுதிப்படுத்தினார்.

24. நித்திய வாழ்வை பெற்றுக் கொள்ள நாம் செய்ய வேண்டுவது என்ன?

இயேசு சிலுவையில் செய்து முடித்த மீட்பின் கிரியையை விசுவாசத்தோடு ஏற்றுக் கொள்ள வேண்டும். இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொள்ளாவிட்டால் பிதாவண்டை சேர முடியாது. கல்வாரியை நோக்கிப் பார்த்து இயேசுவின் இரத்தத்தின் மேல் விசுவாசம் வைத்து பாவ அறிக்கை செய்கிறவன் மரணத்தின் வல்லமையிலிருந்து விடுவிக்கப்படுகிறான். நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ளுகிறான்.

25. பரிசுத்தவான்கள் (தேவனுடைய பிள்ளைகள்) ஏன் நோயினால் கஷ்டப்படுகிறார்கள்?

தங்களை பூரண பரிசுத்தராக மாற்றிக் கொள்வதற்காக அவர்களை மாசு மருவற்றவர்களாக தேவ சந்நிதியில் நிறுத்துவதற்காக பயன்படுத்தும் ஆயுதம். அந்த வியாதி படுக்கையிலும் கூட கர்த்தர் அவர்களை தாங்கிக் கொள்வார். அவர்கள் அருகில் இருந்து அவர்களை பலப்படுத்துவார்.

26. தேவன் தம்முடைய பிள்ளைகளின் வாழ்க்கையில் சில சமயங்களில் சாத்தானை அனுமதிப்பதன் காரணங்கள் என்ன?

இஸ்ரவேலர் பாவம் செய்யும் போது கர்த்தர் பஞ்சம், மழை, தாழ்ச்சி, வெட்டுக்கிளிகள் பயிரை அழித்தல், கொள்ளைநோய் வாலிபர் பலர் வெட்டப்படல் இறுதியாக பூகம்பம் போன்ற பல வாதைகளைக் கொடுத்தும் அவர்கள் மனம் திரும்பவில்லை.

சாலமோன் செய்த பாவத்தினிமித்தம் அவன் மகன் ரெகோபேயாம் காலத்தில் தேசம் இஸ்ரவேல் தேசம், யூதேயா தேசம் என இரண்டாக பிரிந்தது அவர்களை அக்கிரமத்தின் பெருக்கினால் இஸ்ரவேல் அசீரியர்களால் சிறைபிடிக்கப்பட்டனர். யூதா பாபிலோனியர்களால் சிறை பிடிக்கப்பட்டனர். தேவஜனம் செய்த பாவங்களினிமித்தம் அவர்களை தண்டித்து இரட்சிக்க வேண்டியதாயிற்று. தன்னுடைய பிள்ளைகள் பாவம் செய்யும் போது அவர்களை கர்த்தர் சிட்சித்து திருத்துகிறார். சில வேளைகளில் சாத்தானையும் அனுமதித்து அவர்களை பொன்னைப் போல துலங்க வைக்கிறார்.

27. பில்லிசூனிய வல்லமை ஏவல் வல்லமை என்னை சேதப்படுத்த முடியுமா?

குடும்பத்தை கலக்குவது சாத்தான். வியாதி, கஷ்டங்கள், வேதனை அவமானம், நிந்தை எல்லாவற்றையும் கொடுப்பான். பிசாசின் தலையை மிதித்தவர் நம் ஆண்டவர். அவர் உன்னோடு கூட இருக்கிறார். பயப்படாதே வெள்ளம் போல சாத்தான் வந்தாலும் ஆவியானவர் நமக்காக கொடி பிடிப்பார். அக்கினி நம்மில் பற்றி எரிந்து கொண்டிருக்கும்போது பிசாசு நம்மை ஒன்றும் செய்ய முடியாது. பிசாசிற்கு எதிர்ந்து நில்லுங்கள். அவன் உங்ளை விட்டு ஓடிபோவான் என்று வேதம் சொல்லுகிறது. யாக்கோபிற்கு விரோதமான மந்திரவாதமும் இல்லை. இஸ்ரவேலுக்கு விரோதமான குறி சொல்லுதலுமில்லை. எண்.23:23

28. எனக்குள் பரிசுத்த ஆவியானவர் இருக்கிறாரா? அந்நிய பாஷை பேசினால்தான் அதை வெளிப்படுத்த முடியுமா?

நீ இரட்சிக்கப்பட்ட அன்றே பரிசுத்த ஆவியானவர் நீ என்னுடைய சொத்து என்று உன்னை முத்திரை போட்டு விட்டார் நீ அன்றிலிருந்து கிறிஸ்துவுக்குள் வளர வேண்டும். அந்நிய பாஷை என்பது அவிசுவாசிகளுக்கு அடையாளம். 23 வரங்கள் உள்ளன. அதில் அந்நிய பாஷை என்பது ஒரு வரமே. அந்நிய பாஷை இல்லாவிட்டால் பரிசுத்த ஆவி இல்லை என்று நினைக்காதே. பரிசுத்த ஆவி நமக்குள் இருப்பது நம்முடைய கனிகளினால் (ஆவியின் கனிகள்) வெளிப்படும்.

29. தேவ பிள்ளைகளுக்கு ஏன் இந்த பாடுகள்?

உன்னை பலமுறை ஆசீர்வதிக்க உன்னைக் கொண்டு பலத்த கிரியை செய்ய, உன்மூலம் ஆண்டவர் நாமம் மகிமைப்பட, உன்னைப் போல பாடுகள் படும் மக்களை ஆறுதல்படுத்த உன்னை ஒரு கருவியாக பயன்படுத்த கர்த்தர் இந்த பாடுகளை அனுபவிக்கிறார்.

தேவன் நம் பட்சத்தில் இருக்கும்போது நமக்கு விரோதியாய் இருப்பவன் யார்? ரோ.8:31 இதோ சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும் சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரம் கொடுக்கிறேன். ஒன்றும் உங்களை சேதப்படுத்தாது. லூக்.10:19.

மந்திர சக்திகள் நமக்கு விரோதமாக வரும். சத்துரு வெள்ளம்போல அழித்து விடும்படி வருவான். ஆனால் பிசாசின் வல்லமை நம்மை மேற்கொள்ளாது. செங்கடல் தேவ ஜனத்தை தடுத்து நிறுத்த முடியவில்லை. யோர்தான் தேவ ஜனத்தை தொடர முடியவில்லை. காரணம் தேவன் அவர்களோடு கூட இருந்தார். அதுபோல யூதா கோத்திர சிங்கம் நம்மோடு இருக்கும்போது அந்த பொல்லாங்கனால் நம்மை ஒன்றும் செய்ய முடியாது. சாத்தான் நம் தேவன் எப்படிப்பட்டவர் என்பதை நன்றாகவே அறிவான். தீங்குநாளிலே அவர் என்னை தமது கூடாரத்தில் மறைத்து என்னை தமது கூடார மறைவிலே ஒளித்து வைத்து என்னை கன்மலையின்மேல் உயர்த்துவார். சங்.27:5 ஆனால் நாம் நம்மை தேவன் தங்கும் ஸ்தலமாக, ஆலயமாக பரித்தப்படுத்த வேண்டும். தேவன் தங்கி இருப்பதை சாத்தான் பார்த்து பயந்து ஓடி விடுவான்.

30. சில சமயங்கள் நம் ஜெபத்திற்கு பதில் கிடைப்பதில்லை ஏன்?

அசீரியருடைய விக்கிரகங்கள் இஸ்ரவேலில் காணப்படும் வரைக்கும் தேவன் இஸ்ரவேலுக்காக யுத்தம் செய்யவே இல்லை. இஸ்ரவேலர் தோற்றுவிட்டனர். விக்கிரகங்களை அப்புறப்படுத்தின பின்னரே கர்த்தர் இஸ்ரவேலுக்காக யுத்தம் செய்தார். அதுபோல அசீரியனாகிய சாத்தானுடைய விக்கிரகங்களாகிய சுபாவங்கள் பெருமை, பொறாமை, ஆணவம், மாய்மாலம் இப்படிப்பட்ட பண்புகள் நம்மிடம் காணப்படும் மட்டும் கர்த்தர் நம் ஜெபத்தை கேட்கவே மாட்டார். முதலில் நம்மை

சுத்திகரிக்க வேண்டும். இன்று உங்களை பரிசுத்தப்படுத்துங்கள். நாளை அற்புதத்தை காண்பீர்கள் என்று வேதம் சொல்லுகிறது.

31. பரிசுத்த ஆவியின் அபிஷேகம் என்பது என்ன? இஸ்ரவேலை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இரத்தத்தின் மூலம் கர்த்தர் விடுவித்து வனாந்திரத்தின் வழியாக மோசே மூலம் வழிநடத்தி கொண்டு வந்து கானானுக்குள் அழைத்துச் சென்றார். அது போல பிசாசின் அடிமைத்தனத்திலிருந்து விடுபட முடியாமல் தவித்த நம்மை இயேசு கிறிஸ்து தம்முடைய இரத்தத்தால் மீட்டு இரட்சித்து ஆவியானவர் மூலம் இந்த உலக வனாந்தரத்திலே நம்மை வழிநடத்தி ஆவிக்குரிய இஸ்ரவேலராகிய நம்மை பரம கானானுக்குள் அழைத்துச் செல்கிறார்.

இந்த உலகமாகிய வனாந்தரத்தில் சத்துருவாகிய சாத்தான் ஒவ்வொரு நிமிடமும் நம்முடன் போராடிக் கொண்டே இருக்கிறான். எப்படியாவது நம் ஆத்துமாவை நஷ்டப்படுத்தி கானானுக்குள் போகாமல் தடுப்பதே அவனது ஒரே குறிக்கோள். ஆகவே தேவனுடைய பிள்ளையே பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையால் மட்டுமே நீ சத்துருவை ஜெயிக்க முடியும். அரண்களை நிர்மூலமாக்கத்தக்க வல்லமை ஆவியானவருக்கு மட்டுமே உண்டு.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் மக்களும், இடங்களும், பொருட்களும் எண்ணையினாலும், தைலத்தினாலும், இரத்தத்தினாலும் அபிஷேகம் செய்யப்பட்டன. அந்நாட்களில் எண்ணையினாலும், பரிசுத்த ஆவியினாலும் அபிஷேகிக்கும் நிலை இருந்தது. சாலமோன், மோசே, யோசேப்பு போன்றோர் இந்த அபிஷேகத்தை பெற்றதினால் அசாதாரண ஞானத்தை பெற்றனர். சிம்சோன் தாவீது போன்றோர் இந்த அபிஷேகத்தை பெற்றதினால் அசாதாரண பெலனை அடைந்தனர். புதிய ஏற்பாட்டுக் காலத்திலும், சிமியோன், மரியாள், சகரியா, போன்றோர் மேல் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார்.

பரிசுத்த ஆவியின் பெருமழையைப் பற்றி அப்போஸ்தலர் நடபடி புத்தகத்தில் முன்மாரி என படிக்கிறோம். ஆனால் தற்போது யோவேல் சொன்னது போல மாமிசமான யாவர் மேலும் ஆவியை ஊற்றிக்

கொண்டிருக்கிறார். இது பின் மாரி மழை.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் தெரிந்தெடுக்கப்பட்ட சில தனி நபர்களுக்கு சில குறிப்பிடப்பட்ட காரணங்களுக்காக சில முக்கிய சந்தர்ப்பங்களில் கொடுக்கப்பட்டது. இந்த புதிய ஏற்பாட்டுக் காலத்தில் தேவனுக்கு சாட்சியாக இயேசு கிறிஸ்துவின் பணிகளை செய்யும் எல்லா விசுவாசிகளுக்கும் அபிஷேகம் பொழியப்பட்டுள்ளது. இந்த கடைசி கால அறுவடைக்காக மாமிசமான யாவர் மேலும் அபிஷேகம் அபரிமிதமாக ஊற்றப்படுகிறது.

இந்த பரிசுத்த ஆவியின் மழையானது இயற்கைக்கு அப்பாற்பட்ட காரியங்களைச் செய்ய நம்மை தகுதிப்படுத்துகிறது. தேவனுடைய பணியை செயல்படுத்த அவருக்கு உபகரணங்கள் தேவைப்படுகின்றன. அவர் நம்மை நிரம்பி வழியச்செய்து அவரது சித்தத்தையும் , குறிக்கோளையும் நிறைவேற்றுகிறார். ஆவிக்குரிய காரியங்களை பகுத்தறிய பரிசுத்த ஆவியின் பெலனே தேவை.

இந்த கடைசி நாட்களில் ஆவியானவர் முழு உலகிலும் மிக வல்லமையாக அசைவாடுகிறார். பாவிகளை உணர்வடையச் செய்கிறார். வியாதிகளை குணமாக்குகிறார். சாத்தானின் செயலை அழிக்கிறார். சாபங்களை தகர்க்கிறார். அற்புதங்களினாலும், அடையாளங்களினாலும் தேவனுடைய வசனத்தை உறுதிப்படுத்துகிறார்.

பரிசுத்த ஆவியின் அபிஷேகம் என்பது தேவனது திட்டம், கிருபை, ஈவு, பிரசன்னம் ஆகும். தேவனது அடிப்படை பண்புகளான பெலத்தின் ஆவி, ஐசுவரியத்தின் ஆவி, ஞானத்தின் ஆவி, அன்பின் ஆவி போன்றவற்றை நமக்குள் செலுத்துகிறார். அபிஷேகத்தின் போது தேவன் இயற்கைக்கு மேம்பட்ட திறன்களையும், தன்மைகளையும் கொடுக்கிறார்.

32. ஆவியின் நிறைவு ஏன் தேவை :

நிறைவான சமாதானம் அடைய தேவ ஞானத்தை பெற, அன்பினால் நிரப்பப்பட, தேவ பெலனை பெற சுமைகள் நீக்கப்பட, நுகங்களினின்று விடுதலை பெற, தேவ ஆசீர்வாதத்தின் ஐசுவரியத்தைப் பெற, வினோத வேலைகளை திறமையாகச் செய்ய, பரலோக

நன்மைகளை முன்னரே அனுபவிக்க, நன்மை செய்ய, இயேசுவின் கிரியைகளை நாமும் செய்ய, சாட்சியாக வாழ, வேதத்தை பிரசங்கிக்க நமக்கு பரிசுத்த ஆவியின் அபிஷேகம் மிக மிகத் தேவை.

33. அபிஷேகத்தை எவ்வாறு பெற்றுக் கொள்ளலாம் :

நாம் இரட்சிக்கப்பட விரும்பினால் நமது பாவங்களை அறிக்கையிட்டு மனஸ்தாபப்பட்டு அவற்றை விட்டு விட வேண்டும். பரிசுத்தமும் நீதியுமான வாழ்க்கை வாழ வேண்டும். இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ள வேண்டும். நாம் அபிஷேகத்தை பெற விரும்பினால் அதற்காக பசித்திருக்க வேண்டும், தாகத்தோடிருக்க வேண்டும். ஆண்டவரிடம் கேட்க வேண்டும். நம்மை வெறுமையாக்கி முற்றிலும் ஆண்டவருக்கு ஒப்புக் கொடுக்க வேண்டும்.

பரிசுத்த ஆவியை பெற்ற பின்னரே ஒரு மனிதன் தன் வாழ்வை குறித்த தேவனது திட்டத்தை நிறைவேற்ற முடியும். வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வு வாழ முடியும். ஒருவன் பரிசுத்த ஆவியால் நிரப்பப்படும் போது தேவன் வானத்திலிருந்து இறங்கி வந்து மனிதனோடு நேரடித் தொடர்பு கொள்ளுகிறார். ஆகவே பரலோகம் இறங்கி வந்து தேவ மகிமை நம் ஆன்மாவை நிரப்புகிறது. அண்ட சராசரங்களை படைத்த ஆண்டவர் மனித எல்லைக்குள் இறங்கி வந்து அவனுக்குள் வாசம் பண்ணுகிறார்.

பழைய ஏற்பாட்டு காலத்தில் தேவன் ஆபிரகாம், யாக்கோபு, நோவா, மோசே இவர்களோடு நேரடித் தொடர்பு கொண்டு பேசினார். அதுபோல இந்த கடைசி நாட்களிலும் தேவ ஆவியானவர் தம் பிள்ளைகளோடு தொடர்பு கொள்ளுகிறார். பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை செழுமையாக அடையாவிட்டால் தேவனுடைய திட்டத்தையும் சித்தத்தையும் முழுமையாக நிறைவேற்ற முடியாது.

நமது தேவன் மாறாதவர். அன்று செய்ததையே இன்றும் செய்து கொண்டே இருக்கிறார். உலகம் சந்தோஷங்களை மனிதனுக்கு தரலாம். ஆனால் அவை தற்காலிகமும் ஆழமற்றதும் நிபந்தனைக்கு உரியவையுமாகும். ஆனால் தேவன் தரும் மகிழ்ச்சியோ நிபந்தனையற்றதும் நீடித்திருப்பதும் ஆழமுமானதாகும்.

ஒருவர் பரிசுத்த ஆவியால் நிரப்பப்படும் போது அவர் மகிழ்ச்சியால் நிரப்பப்படுகிறார். காரணம் தேவனே உண்மையான சந்தோஷத்தின் ஊற்றுக்கண். சமாதானம் தேவனால் மட்டுமே கொடுக்க முடியும். இந்த உலகத்தில் யுத்தங்களும் உபத்திரவங்களும் நியாயக் கேடுகளும்

தீமைகளும் உண்டு. ஆனால் பரலோகில் எப்போதும் சமாதானம் சந்தோஷம், தெய்வீக நீதி உண்டு. இவற்றையே ஆவியானவர் நமக்குத் தந்து பரலோக இன்பத்தை பூமியில் அனுபவிக்கச் செய்கிறார்.

பரலோகம் எங்கும் தேவ தூதர்கள் இருப்பது சாதாரண காரியம். அது போல தேவன் பூமியில் உலாவும் போதும் அவரோடு ஆயிரமாயிரம் தேவ தூதர்கள் இருப்பார்கள். இந்த தேவ தூதர்கள் பணிவிடை ஆவிகள் ஆகும். அவர்கள் பணி தேவனை புகழ்வதும், துதிப்பதும் ஆகும். பரலோகில் அவர்கள் தேவனை துதித்து பாடுவதும் பூலோகத்தில் தேவனுக்காக சில பணிகளை செய்வதும் தேவபிள்ளைகளுக்கு பூமியில் பாதுகாப்பு அளிப்பதும் இவர்கள் வேலையாகும். ஒருவர் பரிசுத்த ஆவியில் நிறையும் போது இந்த பரலோக மகிமை பூமிக்கு இறங்கி வருகிறது.

34. ஒருவனிடத்தில் பரிசுத்த ஆவியானவர் இருக்கிறார் என்பதை எப்படி தெரிந்து கொள்ளலாம்?

ஆவியின் கனியோ அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம். கலா.5 : 22, 23. இந்த ஆவியின் கனிகள் உன்னிடம் காணப்படுகிறதா? இவை உன்னிடம் காணப்படுமேயானால் உன்னிடம் பரிசுத்த ஆவியானவர் நிச்சயமாகவே வாசம் செய்கிறார். ஆவியினுடைய அனுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்படுகிறது.

எப்படியெனில் ஒருவனுக்கு ஆவியினாலேயே

1. ஞானத்தை போதிக்கும் வசனமும், 2. வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும், 3. வேறொருவனுக்கு அந்த ஆவியினாலே விசுவாசமும் 4. வேறொருவனுக்கு அந்த ஆவியினாலே குணமாக்கும் வரங்களும், 5. வேறொருவனுக்கு அற்புதங்களை செய்யும் சக்தியும், 6. வேறொருவனுக்கு தீர்க்க தரிசனம் உரைத்தலும், 7. வேறொருவனுக்கு ஆவிகளை பகுத்தறிதலும், 8. வேறொருவனுக்கு பற்பல பாஷைகளை பேசுதலும், 9. வேறொருவனுக்கு பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதலும் அளிக்கப்படுகிறது. இவையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து தமது சித்தத்தின்படியே அவனவனுக்கு பகிர்ந்து கொடுக்கிறார். கொரி.12:7 – 11.

நான் பிதாவை வேண்டிக் கொள்வேன். அப்பொழுது

என்றென்றைக்கும் உங்களுக்குள்ளே கூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். உலகம் அந்த சத்திய ஆவியானவரை காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக் கொள்ள மாட்டாது. அவர் உங்களுக்குள்ளே இருப்பதால் நீங்கள் அவரை அறிவீர்கள். யோவான் 14 : 16, 17.

எந்த ஆத்துமா அறுவடைக்கு நேராக ஆயத்தமாக இருக்கிறதோ அந்த ஆத்துமாவுக்கு நேராக பரிசுத்த ஆவியானவர் வழி நடத்துகிறார். பரிசுத்த ஆவியானவர் நம்முடைய ஆவியோடு பேசுவார். அது தான் தேவ சத்தம். தேவ சத்தம் கேட்டு, ஆவியானவரால் ஏவப்பட்டு வழி நடத்தப்படுவது ஓர் உன்னத ஆசீர்வாதம். பரம கானானுக்கு போகும் நமக்கு இந்த ஆசீர்வாதம் இருக்கிறதா? மண்பாண்டத்திற்குள் வைக்கப்பட்ட ஓர் விலையேறப்பட்ட பொக்கிஷம் தான் பரிசுத்த ஆவியானவர்.

35. அந்நிய பாஷை என்பது என்ன?

அந்நிய பாஷை என்பது ஒரு தெய்வீக பாஷை. அந்நிய பாஷை பேசினால் மட்டும் போதும் என்பது தவறு. வேதம் வாசிப்பு, ஜெபம், பரிசுத்தம், அன்பு, ஊழியம் போன்ற மற்றவை யெல்லாம் சரியாக இருந்து அவற்றோடு அந்நிய பாஷையும் சேர்த்துக் கொண்டால் கிறிஸ்தவ வாழ்க்கை வெற்றியுள்ள வெற்றி வாழ்க்கையாக அமையும். மாமிச பெலத்தினால் நீண்ட காலம் போராடி சாதிப்பதை விட தேவ பெலத்தால் சுலபமாக குறைந்த காலத்தில் சாதித்து வெற்றிக் காண தேவன் கொடுத்த அரியதோர் பொக்கிஷம் இது. அந்நிய பாஷை பேசாமல் முன் மாதிரியாக வாழ்ந்த பரிசுத்தவான்கள் ஏராளம் உண்டு. பழைய ஏற்பாட்டு கால பரிசுத்தவான்களின் வாழ்க்கை இதற்கு ஒரு சவாலாகும்.

அந்நிய பாஷை பேசும் சிலருடைய பரிதாபமான வாழ்க்கையும் உண்டு. ஆகவே தேவாதி தேவன் மனிதர்களுக்குள் வந்து அவர்களை தமது மாளிகையாக்கி கொண்ட இந்த கடைசி நாட்களில் **பரிசுத்தமான வாழ்க்கை மிகமிக முக்கியம்** என்பதை மறந்து விடக் கூடாது. நாவின் வல்லமையை ஆவியானவர் அறிந்தது போல சாத்தானும் அறிந்துள்ளான். சாத்தானும் தனது வார்த்தைகளை நமது மனதில் போட்டு எப்படியாவது நாம் அதை வாயால் பேச வேண்டும் என்று ஏவிக் கொண்டே இருப்பான். இரண்டிற்கும் உள்ள வேறுபாடு என்னவென்றால்

ஆவியானவர் நமது உள்ளான மனதில் வாசம் பண்ணி அதன் மூலம் நாவிற்கு வார்த்தைகளை அனுப்புகிறார். ஆனால் இரட்சிக்கப்பட்ட மனிதனின் ஆவிக்குள் சாத்தான் புக முடியாது. ஆகவே சிந்தனை திரையில் தனது வார்த்தையை போடுகிறான். அந்த வார்த்தைகள் மரண வாசனையை உண்டாக்கும்.

ஆவியான தேவனோடு நம்முடைய ஆவி உறவாடும் போது இந்த தெய்வீக பாஷை கொடுக்கப்படுகிறது. இதை பிற மனிதரோ சாத்தானுடைய சேனைகளோ புரிந்து கொள்வதில்லை. இத்தகு ஜெபங்களில் அசுத்த ஆவிகளோடு போராடவும் அவசியமாகிறது. ஆவியானவர் நமக்குள் இருந்து அந்தகார ஆவிகளுக்கு கட்டளையிடுவார். அது நமது சொந்த மொழியிலோ, அவரது மொழியிலோ சாத்தான் மொழியிலோ இருக்கலாம். ஆவியானவர் பண்மொழி புலவர். அவருக்குத் தெரியாத பாஷைகளே கிடையாது. திரியேக தேவனின் பாஷையும் தெரியும். தேவ தூதனின் பாஷையும் தெரியும். உலகில் உள்ள எல்லா பாஷைகளும் தெரியும். ஆவியானவரின் ஆளுகைக்குள் வந்த ஒருவன் இதில் எந்த பாஷையும் பேச முடியும். ஆவியானவரோடு ஐக்கியம் இல்லாமலும், மந்திரம் போல பாஷைகளை பேசுவோரும் உண்டு. இந்த பாஷைகளினால் எந்த பயனும் இல்லை. இவர்களுக்கு மிகமிக எச்சரிக்கையாக இருங்கள்.

தேவனுடைய இராஜ்யம் ஆவிக்குரிய இராஜ்யம். மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை. இயேசு கிறிஸ்துவின் வருகையில் நாம் எடுத்துக் கொள்ளப்படும் போது நமக்கு ஆவிக்குரியதான ஒரு மகிமையான சரீரம் கொடுக்கப்படும்.

பரிசுத்த ஆவியின் அபிஷேகம் என்பது தேவ பிரசன்னத்தை உணரும் அனுபவம். பரலோக அனுபவம் ஆகும். பரலோகம் மிக விசாலமானதும், எல்லையற்றதும், அழிவற்றதும், அதரிசனமானதும், தொட்டு உணர முடியாததும் ஆகும்.

ஆவியானவரின் நிறைவை பெற்று, தேவனது சித்தப்படி மக்கள் வாழ வேண்டும் என்பதே தேவனது திட்டம். தேவனது சித்தம் என்பது மக்களின் வாழ்வுக்கான தேவனது வாஞ்சை, திட்டம், நோக்கம், ஆகும்.

36. தேவ சித்தப்படி வாழ்வது எப்படி?

தேவனது சித்தத்தை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

பொது சித்தம் :

பொது சித்தம் எல்லா மனிதருக்கும் ஒன்றே. மனிதனை

படைத்தது தேவனுடைய நோக்கம், மனிதர் தேவ மக்களாக வாழ, அவருடைய கட்டளைகளுக்கு கீழ்படிய, அவரை ஆராதிக்க, துதிக்க, ஜெபத்தின் மூலம் தேவனோடு தொடர்பு கொள்ள, பரிசுத்தமான ஒரு வாழ்வு வாழ, ஆவிக்குள் வளர, இயேசுவைப் போல மாறி அவருடைய கிரியைகளை செய்ய, பிறருக்கு நன்மை செய்ய, ஆவியின் கனிகளை கொடுக்க, ஆத்துமாக்களை ஆதாயப்படுத்த, பிசாசின் கிரியைகளை அழிக்க, தேவனையும், அயலாரையும் நேசிக்க வேண்டும் என்பதே. இதுவே நம்மேல் தேவன் கொண்டுள்ள பொதுவான சித்தம்.

கிறிஸ்துவின் கிரியைகள் அவருடைய பிள்ளைகளால் செயல்பட வேண்டும். அதற்கு நம்முடைய வாய், கரங்கள், கால்கள், காதுகள், இதயம் தேவனுக்குத் தேவை. தேவனது சித்தம் நம் மூலமாகவே நிறைவேற வேண்டும் என்பது தேவனது திட்டம்.

2. தேவனுடைய சிறப்பு சித்தம் :

இது ஒரு தனிநபர் வாழ்வில் தேவன் ஏற்படுத்துகின்ற ஒரு குறிப்பிட்ட அழைப்பு. தேவனுடைய பொது சித்தத்தை நிறைவேற்றும் ஒரு குறிப்பிட்ட நபரை தேவன் பிரத்தியேகமான முறையில் பயன்படுத்த விரும்புகிறார். அந்த நபர் மீது தேவன் கொண்டுள்ள தமது சிறப்பு சித்தத்தை பல வழிகளில் வெளிப்படுத்துகிறார். மெல்லிய சத்தமாக வேத வசனத்தின் மூலமாக, சொப்பனம் மூலமாக, வாஞ்சைகள் வாயிலாக நமது ஆவியோடு உள்ளான சாட்சி வாயிலாக, நமது சிந்தை வாயிலாக, தேவன் தமது சிறப்பு சித்தத்தை வெளிப்படுத்துகிறார்.

3. சுயாதீன சித்தம் :

சுயாதீன சித்தம், மனிதனுக்கு சுதந்திரம், உரிமை, தனிச்சலுகையை அளிக்கிறது. அதேசமயம், தேவனுக்கு பயப்படவும், கீழ்ப்படியவும், ஆராதிக்கவும், ஜெபிக்கவும், சேவை புரியவும், அன்பு செலுத்தவும் ஐக்கியப்படவும் மனிதன் கடமைப் பட்டிருக்கிறான். அதற்காகவே சுயாதீன சித்தம் கொடுக்கப்பட்டுள்ளது. மனிதன் சுய சித்தத்தை துஷ்பிரயோகம் செய்தால் தேவன் அதை திரும்ப பறித்துக் கொள்வதில்லை. மனிதன் சுய சித்தத்தோடு படைக்கப்பட்டவன். அவன் தேவனுக்கு கீழ்படியலாம் அல்லது கீழ்படியாமலும் போகலாம், நலமானதைச் செய்யலாம் அல்லது தீதானதைச் செய்யலாம். தேவனுக்கு ஊழியம் செய்யலாம். அல்லது உலகத்திற்கு ஊழியம் செய்யலாம். தேவனை வணங்கலாம் அல்லது சாத்தானை வணங்கலாம். இது

மனிதனுடைய சுயசித்தத்தையே சார்ந்தது.

ஆகவே ஒரு மனிதன் தேவனுடைய பொது சித்தப்படி நடந்து தன் மீது தேவன் கொண்டுள்ள சிறப்பு சித்தத்தை அறிந்து தன் சுயாதீன சித்தப்படி தேவனுடைய வழிகளை தேர்ந்தெடுத்து கானானை நோக்கி அடி எடுத்து வைக்க வேண்டும் என்பதே தேவனது திட்டம்.

முடிவுரை :

தேவன் எல்லா செல்வத்திற்கும் ஊற்றுக்கண். உலகின் எல்லா பொருட்களையும் உருவாக்கியவர் அவரே. அண்டக்கோளத்தின் எல்லாக் கோள்களையும் படைத்தவர் அவரே. அவர் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமை உடையவர் தேவனே எல்லாவற்றிற்கும் சொந்தக்காரர். உரிமையாளர். தேவன் எல்லா செயல்களையும் சரியான நேரத்தில் செவ்வனே செய்பவர். ஒருவனை பதவியில் வைக்கவும், பதவியை விட்டு நீக்கவும் அவரே அதிகாரம் உடையவர். அரசனின் இருதயம் தேவனுடைய கரத்தில் இருக்கிறது.

இந்த உலகில் நம் வாழ்வு என்பது மிகக் குறுகிய காலமே. இந்த உலகில் நம் வாழ்வு, நிழல், நீராவி, புகை, புல் இவற்றிற்கு சமம். நம்முடைய நாமங்கள் பரலோகில் எழுதப்பட்டிருக்கிறதா? நம்முடைய குடியிருப்பு பரலோகமே. இவ்வுலக வாழ்வு ஒரு பரதேசியின் வாழ்வை போன்றது. இந்த சரீரம் ஒரு வாடகை வீடு. நம் எஜமான் அழைக்கும் போது நாம் சேர்த்து வைத்த ஆஸ்திகள் அத்தனையும் கொடுத்தாலும் ஒரு நிமிடம் கூட இங்கு தங்க அனுமதி கிடையாது. ஆகவே இப்பூவுலக வாழ்வோடு நம் வாழ்க்கை முடிவடைவதில்லை. பரலோகில் நமக்கு ஒரு நிரந்த வாழ்க்கை உண்டு. அதற்க்காக நம்மை ஆயத்தப்படுத்துவோம். ஒரு நிமிடம் கூட அவர் நம்மை விட்டு விலகாதபடி அவரோடு கூட பரம கானானை நோக்கி அடி எடுத்து வைப்போம்.

பூலோக இன்பங்கள் மாறிப்போய் விடுமே
லோகத்தார் எல்லாரும் கைவிடுவார்களே
உற்றார் உறவினர் தள்ளிடும் வேளையில்
யோசேப்பின் தேவன் என் கூட்டாளியல்லவோ.
நம்பும் சகோதரர் வம்பு செய்திடுவார்.
அப்பம் புசித்திட்டோர் குதிங்காலை தூக்குவார்.
ஆறாத் துயரிலும் மாறாக் கண்ணீரிலும்
ஆற்றிடும் தேவன் என் கூட்டாளி அல்லவோ.